இதழ் 320
04 ஜனவரி 2025

# இலக்கு

வாராந்த மின்னிதழ்

GLOBAL TAMIL MEDIA CENTER

SUBSCRIBE US! youtube.com/c/IlakkuWeb
LIKE US! facebook.com/ilakku.ilakku.10
FOLLOW US! twitter.com/Ilakku1




## இலங்கைக்கு 2025 எவ்வாறு அமையும்?

—— அகிலன்




சட்டவாளர் தவராசா



© 2025 இலக்கு இணையம்

## தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்க கோரி கையெழுத்து போராட்டம்!



தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்க கோரி கையெழுத்து போராட்டம் நேற்று கிளிநொச்சியில் முன்னெடுக்கப்பட்டது.

போராளிகள் நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் குறித்த போராட்டம் கிளிநொச்சியில் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள மக்கள் குறித்த போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து கையொப்பங்களிட்டிருந்தனர்.

முன்னதாக மன்னாரிலும் அரசியல் கைதிகளை விடுதலை செய்ய வலியுறுத்தி கையெழுத்து போராட்டம் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## புது வருடத்தில் அமெரிக்காவில் இரு பயங்கரவாதத் தாக்குதல்கள்




புதிய வருடப் பிறப்பன்று அமெரிக்காவில் இடம் பெற்றதாக கருதப்படும் இருவேறு பயங்கரவாதத் தாக்குதல்களில் 16 பேர் கொல்லப்பட்டுள்ளதுடன் பலர் காயமடைந்துள்ளனர். இந்த தாக்குதல்கள் குறித்து விசாரணைகளை அமெரிக்காவின் புலனாய்வு அமைப்பான எப்.பி.ஐ மேற்கொண்டு வருகின்றது.

புதுவருடப் பிறப்பன்று அமெரிக்காவின் சென் ஒலியன்ஸ் நகரத்தில் உள்ள மக்கள் கூட்டம் நிறைந்த வீதியில் வாடகைக்கு எடுக்கப்பட்ட பிக்அப் வாகனத்தை அமெரிக்காவின் முன்னாள் படைவீரர் ஒருவர் செலுத்தியதால் 15 பேர் கொல்லப்பட்டும், மேலும் பலர் காயமடைந்துமிருந்தனர். தாக்குதலுக்கு பயன்படுத்தப்பட்ட வாகனத்தில் இருந்து ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பின் கொடி, துப்பாக்கி மற்றும் வெடிகுண்டுகள் மீட்கப்பட்டதாக காவல்துறையினர் தெரிவித்துள்ளனர். சமுட் டின் ஜபார் என்ற 42 வயதான தாக்குதலாளி

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

# நாடு கடத்தப்படப்போகும் ரோகிங்யா அகதிகள்!



மியன்மாரின் ரோகிங்கிய புகலிடக்கோரிக்கையாளர்களை நாடு கடத்துவது குறித்து ஆராய்ந்து வருவதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபால தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு கடற்பரப்பிற்கு சமீபத்தில் வந்து சேர்ந்த ரோகிங்யா புகலிடக்கோரிக்கையாளர்கள் நாடு கடத்துவது குறித்து ஆராய்ந்து வருவதாக தெரிவித்துள்ள அமைச்சர் சட்டரீதியான நடைமுறைகள் கலந்துரையாடல்களை மேற்கொண்ட பின்னர் இது குறித்து தீர்மானிக்கவுள்ளதாக தெரிவித்துள்ளார்.

இலங்கை வெளி விவகார அமைச்சு மியன்மார் அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டுள்ளது என தெரிவித்துள்ள அமைச்சர் இலங்கையில் உள்ள ரோகிங்யா புகலிடக்கோரிக்கையாளர்களின் பெயர் விபரங்களை ஏற்கனவே மியன்மார் அரசாங்கத்திடம் கையளித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

அதிகாரிகளுடனான பேச்சுவார்த்தைகள் முடிவடையும் வரை அவர்கள் இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டிருப்பார்கள் என அமைச்சர் தெரிவித்துள்ளார்.

## காசா போரில் 891 இஸ்ரேலிய படையினர் பலி

காசாவில் கடந்த 15 மாதங்களாக இஸ்ரேலிய படையினருக்கும், ஹமாஸ் அமைப்பினருக்கும் இடையில் இடம்பெறும் போரில் இதுவரையில் 891 இஸ்ரேலிய படையினர் கொல்லப் பட்டுள்ளதாக இஸ்ரேலிய ஊடகமான Yedioth Ahronoth தெரிவித்துள்ளது.

1973 ஆம் ஆண்டு இடம்பெற்ற Yom Kippur போருடன் ஒப்பிடும்போது மிக அதிகளவான படையினர் கொல்லப்பட்டுள்ள மோதலாக இந்த மோதல் அமைந்துள்ளது. 2014 ஆம்



ஆண்டு இடம்பெற்ற போரில் 152 இஸ்ரேலிய படையினர் கொல்லப்பட்டதாக அது மேலும் தெரிவித்துள்ளது. போர் ஆரம்பமாகிய

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

## செயற்கை நுண்ணறிவு திட்டத்தில் இணைந்து செயற்பட ரஸ்யா – சீனா இணக்கம்




செயற்கை நுண்ணறிவு திட்டத்தில் சீனா மிகவும் அதிகளவான முன்னற்றத்தை அடைந்துள்ளதால் சீனாவின் நிறுவனங்களுடன் இணைந்து ரஸ்ய அரசும், ரஸ்யாவின் மிகப்பெரும் வங்கியான Sberbank என்ற வங்கியும் செயற்படும் என ரஸ்ய அதிபர் விளமிடீர் பூட்டீன் தெரிவித்துள்ளார்.

செயற்கை நுண்ணறிவு தொடர்பில் கடந்த மாதம் இடம்பெற்ற கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதுடன், அதற்கு பொறுப்பாக ரஸ்யாவின் பிரதமர் மிக்கெயில் மிசுஸ்ரினும், வங்கியின் தலைவர் ஹேர்மன் ரெப்பும் நியமிக்கப்பட்டுள்ளனர். இந்த செயற்திட்டம் தொடர்பான

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

## காரைநகர் படகுத் தளத்தை புனரமைக்க இந்தியா–இலங்கை இடையே ஒப்பந்தம்

இலங்கையின் வடக்கு மாகாணத்தில் உள்ள காரை நகர் படகுத் தளத்தை புனரமைப்பதற்காக இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று கையெழுத்தாகியுள்ளது.

இந்திய அரசாங்கத்தின் 290 மில்லியன் ரூபாய் மானிய உதவியுடன்இந்தஒப்பந்தம்கையெழுத்தாகியுள்ளது.

இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் 2024 டிசம்பர் 16ஆம் திகதியன்று இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் சந்தோஸ் ஜா மற்றும் அப்போதைய இந்தியாவிற்கான இலங்கை உயர் ஸ்தானிகர் க்சேனுகா திரேனி செனி



விரத்ன ஆகியோரால் கையெழுத்திடப்பட்டு பரிமாறிக் கொள்ளப்பட்டது.

இதன்படி, இலங்கையின் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார மேம்பாட்டு அமைச்சகத்தின்கீழ், காரைநகர்படகுத்தளத்தை புனரமைக்க இந்தத் திட்டம்

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

## உலகின் சனத்தொகை 8 பில்லியனாக உயர்வு

புது வருடத்தின் முதலாவது நாளின் கணிப்பீட்டின்படி உலகின் சனத்தொகை 71 மில்லியன் மக்களால் அதிகரித்துள்ளது. அதாவது உலகின் மொத்த சனத்தொகை 8.09 பில்லியனாக அதிகரித்துள்ளது என அமெரிக்காவின் குடிசன மதிப்பீட்டுத் திணைக்களம் இந்த வாரம் தெரிவித்துள்ளது.

2023 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 2024 ஆம் ஆண்டின் மக்கள் தொகை அதிகரிப்பு குறைவடைந்துள்ளது. 2023 ஆம் ஆண்டு 75 மில்லியன் மக்கள் தொகை அதிகரித்திருந்தது. ஆனால் 2024 ஆம் ஆண்டு அது 71 மில்லிய னாக குறைவடைந்துள்ளது.



தொடர்ச்சி 16ஆம் பக்கம்

## இந்தியா சோலார் திட்டம், காணி அபகரிப்புக்கு எதிர்ப்பு:

## திருகோணமலையில் ஆர்ப்பாட்டம்!



திருகோணமலை முத்துநகர் பகுதியில் இலங்கை துறைமுக அதிகார சபையினால் கையகப் படுத்தப்பட்டுள்ள விவசாய காணியில் மேற் கொள்ள திட்டமிடப்பட்டுவரும் இந்திய சூரிய சக்தி மின்வலு திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் குறித்த காணிகளை விவ சாயிகளுக்கு மீள வழங்க வேண்டும் என முத்துநகரின் ஒன்றிணைந்த விவசாய சம் மேளனங்களின் சார்பில் கோரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை உப்புவெளி கமநல சேவை நிலையத்திற்குட்பட்ட முத்துநகர் கிராம சேவகர் பிரிவில் உள்ள அம்மன்குளம் விவசாய சம்மேளனம், தகரவெட்டுவான் விவசாய சம்மேளனம், முத்துநகர் விவசாய சம்மேளனம்,மத்தியவெளி விவசாய சம் மேளனம் ஆகிய விவசாய சம்மேளனங் களினுடைய விவசாயிகள் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றினை நேற்று முன் னெடுத்திருந்தனர்.

இதன்போது "வயிற்றுப் பசிக்கு சோலர் பவரா?", அழிக்காதே அழிக்காதே வாழ்வாதாரத்தை அழிக்காதே, "ஏழை விவசாயிகளை சுரண்டாதே" போன்ற வாசகங் கள் அடங்கிய பதாதைகளை ஏந்தியும், கோசங்களை எழுப்பியும் இருந்தனர்.

அதே நேரம் தமது கோரிக்கைகள் அடங்கிய மனு ஒன்றிணையும் கிழக்கு மாகாண ஆளுநரின் பிரத்தியேக செயலாளர் இராஜசேகர் அவர்களிடமும், பாராளுமன்ற உறுப்பினர் சண்முகம் குகதாசன், பாராளுமன்ற உறுப்பினர் ரொஷான் அக்மீமன, பிரதேச செயலாளர் மதிவண்ணன் ஆகியோரிடம் கையளித்தனர்.

இதன்போது குறித்த காணிகளில் மேற்கொள்ள திட்டமிடப்பட்டிருக்கும் திட்டங்களை தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்குமாறு கடந்த மார்கழி மாதம் 24ஆம் திகதி மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் முடிவு எட்டப்பட்டுள்ளதாகவும் உங்களுடைய காணிகளை உங்களிடம் கையளிக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தற்போது இணக்கப்பாட்டளவில் முடிவுகள் எட்டப்பட்டுள்ளதாகவும் விரைவில் குறித்த காணிகளை மக்களிடம் கையளிக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பிரதேச ஒருங்கிணைப்புத் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரொஷான் அக்மீமன மக்களிடம் உறுதியளித்தார்.

மேலும் குறித்த இந்திய சூரிய சக்தி மின்வலு திட்டம் நடைமுறைப்படுத்தப்படுமானால் அம்மன் குளம், சின்ன அம்மன் குளம், தகரவெட்டுவான் குளம், முத்துநகர் குளம், மத்தியவெளி குளம் ஆகிய ஐந்து சிறு குளங்கள் உட்பட ஏறக்குறைய 1600 ஏக்கர் விவசாய நிலங்களும், 1200 விவசாயிகளும் பாதிக்கப்படுவார்கள் எனவும் சுட்டிக்காட்டப்பட்டது. அத்துடன் 50 ஏக்கர் மேட்டு நில உப உணவுப் பயிர்களும் செய்கை பண்ணப்பட்டு ஏறத்தாள 4200 தொடக்கம் 5000 பயனாளிகள் பயனடைந்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றன.

கடந்த 2024ஆம் ஆண்டு அரச நிதி ஒதுக்கீட்டின்கீழ் தகரவெட்டுவான் குளம் புணரமைக்கப்பட்டு 80வீத பணிகள்நிறைவுற்றிருந்த நிலையில் இலங்கைதுறைமுக அதிகார சபையினர் அதனை நிறுத்தியிருந்ததோடு

தொடர்ச்சி 16ஆம் பக்கம்

ஆசிரியர் தலையங்கம்

இலக்கு

## சனவரியில் தொடங்கவுள்ள புதிய அரசியலமைப்புத் தயாரிப்பில் தேச இனங்களின் இறைமைகளின் சமத்துவம் வலியுறுத்தப்பட வேண்டும்

சிறிலங்காவின் அமைச்சர் அவையின் பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ மூன்று ஆண்டுகளின் பின்னர்தான் புதிய அரசியலமைப்பு தொடர்பான யோசனைகள் மக்களிடம் குடியொப்பத்திற்காக முன்வைக்கப்படும் என்று கூறியிருந்த நிலையில் தற்போது நீதியமைச்சர் ஹர்ஷண நாணயக்கார ஜனவரியிலேயே புதிய அரசியலமைப்புக்கான முயற்சிகள் ஆரம்பமாகும் என தெரிவித்துள்ளார். இந்நிலையில் புதிய அரசியலமைப்புக்கான முயற்சிகள் உடனடியாக ஆரம்பிக்கப்பட வேண்டுமென வலியுறுத்தி வரும் இலங்கையின் முக்கிய தமிழ் நாளிதழான வீரகேசரி 29.12. 2024 ஆசிரிய தலையங்கம் மூலம் மீளவும் அழைப்பு விடுத்துள்ளதை இலக்கும் வரவேற்கிறது. இந்த அழைப்பு அரசாங்கத்திற்கு மட்டுமல்ல ஈழத்தமிழ் அரசியல்வாதிகளுக்குமான ஒரு அவசர அழைப்பாக அமைகிறது. ஏனெனில் ஈழத்தமிழ் அரசியல்வாதிகள் தங்களுக்குள் மக்களால் நடாளுமன்றத் தேர்தலில் ஏற்கப்பட்டவர்களும் ஏற்கப்படாதவர்களும் கூட புதிய அரசியல் அமைப்பு குறித்து ஒருமைப்பாட்டுடன் செயற்பட்டு அனைவருக்கும் ஏற்புடைய ஆலோசனைகள் அடங்கிய தமிழர்களின் அரசியல் அமைப்பு கட்டமைப்பினை முன்வைக்கின்றனர். இதற்காக அவர்களை பாராட்டுகிற அதே வேளை தாயகத்திலும் புலத்திலம் உள்ள அரசியல் அமைப்புக்குத் தங்கள் கருத்துகளை வழங்க அக்கறையுள்ள ஒவ்வொரு ஈழத்தமிழரும் தங்கள் கருத்துகளைப் புதிய அரசியலமைப்பு குறித்துத் குறுகிய காலத்தில் தெரிவிக்க வல்ல அமைப்பாக இந்தக்கட்டமைப்பை மாற்றினால்தான் அனைத்து ஆர்வம் உள்ளவர்களின் எண்ணங்களை உள்வாங்கிய பலமான அரசியல் அமைப்புக்கான ஆலோசனைத் தொகுப்பாக அது அமையும் என்பது உறுதி.

அதே நேரத்தில் இலங்கைத் தீவில் இயல்பாகவே உள்ள தமிழ், சிங்கள தேச இனங்களினதும் இறைமைக ளின் சமத்துவத்தன்மை அரசியலுக்கு அப்பாற்பட்ட முறையில் மதிக்கப் பெற்று, ஈழத்தமிழர்களின் தாயகப் பகுதிகளை ஈழத்தமிழர்களும் சிங்களவர்களின் தாயகப்பகுதிகளைச் சிங்களவர்களும் தங்களுக்கு இயல்பாகவே உள்ள தன்னாட்சி உரிமைகளின் அடிப்படையில பொருளாதார வளர்ச்சிகள் வேகம் பெறக் கூடிய வகையில் கூட்டாண்மை பங்காண்மைகளுடன் பேணி வளர்க்க உறுதியளிக்கப்பட வேண்டும். அத்துடன் இலங்கைத் தீவின் கூட்டு மொத்தப் பொருளாதார வளர்ச்சிகளை, பாதுகாப்பை, நிதி உறுதிப்பாட்டை, மதிப்பலத்தை வெளிப் படுத்தி, அதனைத் தங்களுடன் சமமான குடிகளாக சமத்துவமான அரசியல் உரிமைகளைக் கொண்டவர்களாக வாழும் முஸ்லீம் மக்கள் மலையகத் தமிழர் ஆகியோரின் பங்களிப்புடனும் உறுதிப்படுத்தத் தக்க வகையில் புதிய அரசியல் அமைப்பு உருவாக்கப்பட்டாலே இலங்கைத் தீவில் இனங்களுக்கு இடையிலான நல்லிணக்கம் நடைமுறைச் சாத்தியமாகும். நாம் சிறிலங்கன் அல்ல இலங்கைத் தீவினர் என்ற மனநிலை அனைத்து மக்களிடையும் உறுதிப்பட்டுச் சிறிலங்காவினர் அனைவருக்குமான சமத்துவ ஆட்சியென அமையாது இலங்கைத் தீவினர் அனைவருக்குமான சமத்துவமான ஆட்சிக்கானதாகப் புதிய அரசியல் அமைப்பு உருவாக்கப்பட வேண்டும். அனைவரும் சமமான சமுக பொருளாதார அரசியல் ஆன்மீக வளர்ச்சிகளில் பாதுகாப்பான அமைதியுடன் வாழ்தல் நடைமுறைச்சாத்தியமாவதற்கான முறையில் அரசியல் அமைப்பு உருவாக்கப்பட வேண்டும் என்பதை இலக்கு இன்றைய தேசிய மக்கள் சக்தியின் அரசுக்கு வலியுறுத்திக் கூறவிரும்புகிறது.

ஈழத்தமிழ் அரசியல்வாதிகளுக்கும் இறைமையை முன்னிறுத்தி தீர்வுத்திட்டங்களைச் சிந்திக்குமாறும் முயற்சித்துக் கைவிடப்பட்ட பழைய தீர்வுகள் எல்லாவற்றையும் மறந்து விட்டு ஈழத்தமிழர்களின் இன்றைய நிலைக்கு ஏற்ப அனைத்துலகத்தால் வற்புறுத்தப்படக்கூடிய அதே வேளை ஈழத்தமிழர்களின் இறைமையுடன் கூடிய தாயக தேசிய தன்னாட்சி உரிமைகளை மீட்டுருவாக்கம் செய்யக் கூடிய புதிய முறைமைகளை முன்னெடுத் தல் காலத்தின் தேவையாக உள்ளது.

ஈழத்தமிழரின் தன்னாட்சி உரிமைப் பிரச்சினைக்கு வித்திட்ட காலனித்துவ பிரித்தானியாவின் இன்றையப் பிரதமரிடம் அந்தத் தவற்றை மாற்றியமைக்கத் தன்னாட்சி உரிமையின் அடிப்படையில் ஈழத்தமிழர்களால் பாதுகாப்பான அமைதி வாழ்வையும் வளர்ச்சிகளையும் மீளப்பெற 1977இல் ஈழத்தமிழரின் குடியொப்பத்தால் உறுதிப்படுத்தபப்பட்ட வட்டுக்கோட்டை தீர்மானத்தின் அடிப்படையில் ஈழத்தமிழரின் தன்னாட்சி உரிமையின் குரலாக அனைத்துலக ஆதரவைப் பெற்றுத் தருமாறு கோரி இவ்வாண்டு பெப்ருவரி 4ம் திகதி ஈழத்தமிழர்கள் கரிநாளாகக் கொண்டாடத் திட்டமிடப்பட்டு வரும் சிறிலங்காவின் சுதந்திர நாளன்று காலை 11 மணிக்கு இலண்டனில் ஈழத்தமிழர்கள் இன்றைய பிரித்தானியப் பிரதமர் சேர் கியர் ஸ்டார்மோருடைய 10ம் இலக்க டவுனிங் ஸ்ரீட் பிரதமர் இல்லம் நோக்கி சிறிலங்காவின் இலண்டன் தூதரகத்தின் முன்னிருந்து ஈழத்தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவினர் அனைத்துலக தமிழர் பேரவை அனைத்துலக தமிழ் ஈழ ராஜதந்திரக் கவுன்சில் போன்ற ஈழத்தமிழர் அமைப்புக்களுடன் இணைந்து பேரணியொன்றை நடாத்தவுள்ளனர். இது இலண்டன் வாழ் ஈழத்தமிழர்கள் தேசமாக எழும் பேரணியாக எழுச்சியுற இப்போதிருந்தே இலண்டன் ஈழத்தமிழர்களும் தங்களிடையுள்ள வேறுபாடுகளை மறந்து அனைத்து நிலையிலும் உழைக்க வேண்டுமென்பது இலக்கின் கருத்தாகவுள்ளது.

நீண்டகால நோக்குடன் தேசத்தைக் கட்டியெழுப்புதலை மையமாகக் கொண்ட அரசியல் அமைப்பு தயாரிப்புச் செயற்றிட்டத்தை ஒரு போதும் ஊதியமற்ற தன்னார்வ அடிப்படையிலான செயற்பாடுகள் மூலம் செய்ய முடியாது. செயற்பட்டாளர்களுக்கு உரிய சம்பளம் வழங்கப்படும் பொழுதே அவரின் திறனை முழு அளவில் பயன்படுத்தி அச்செயற்றிட்டத்தைத் திட்டமிட்டபடி திட்டமிட்ட காலத்துள் நிறைவேற்ற முடியும் என்கிற முக்கியமான கருத்தினை கடன் வர்த்தகம் மற்றும் பொருளியல் ஆய்வாளரும் கொழும்புப் பல்கலைக்கழக விரிவுரையாளருமான உமேஷ் மொரமுதலி தனது எக்ஸ் தளத்தில் சிறிலங்காவின் அரசத்தலைவர் அரசாங்கத்துக்காப் பலர் தன்னார்வ அடிப்படையில் பணியாற்றுகிறார்கள் எனக் கூறியமைக்குத் தனது பதில் கருத்தாகக் கடந்த வாரத்தில் வெளியிட்டிருந்தார்.

இவ்விடத்தில் சிறிலங்காவின் ஈழத்தமிழர் இறைமை மறுப்பின் விளைவாகவும் அதன் ஈழத்தமிழர் பண்பாட்டு இனஅழிப்பின் தொடக்கமாவும் 1974 ஜனவரி 10 இல் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற 4வது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் 11 ஈழத்தமிழர்களின் உயிர்களை இழக்கவைத்த பண்பாட்டு இனஅழிப்பு குறித்து 51 ஆண்டுகளாக எந்த அனைத்துலக நீதியையும் பெற இயலாதிருப்பதைச் சிந்திக்கையிலும், ஈழத்தமிழர்கள் சிறிலங்காவின் முள்ளிவாய்க்கால் இனஅழிப்பின் பின்னர் கடந்த பதினைந்தாண்டுகளாகத் தங்களின் தேசத்தைக் மீள் கட்டியெழுப்ப இயலாத நிலையைச் சிந்திக்கையிலும், ஊதியமற்ற தன்னார்வ செயற்பாட்டளார்களைப் பயன்படுத்தி முயற்சித்து வருவதே திறனற்றதாகச் செயற்பாடுகள் பலனின்றிப் போனதற்கான முக்கிய காரணி என எண்ணத் தோன்றுகிறது. வேலை விபரிப்பு வழங்கப்படாது ஊதியமின்றிய செயற்றிட்டத்துக்கான பலங்கள் பலவீனங்கள் சந்தர்ப்பங்கள் அச்சங்கள் உள்ளடக்கிய வர்த்தகத் திட்டமின்றி எதிர்கொள்ளும் அபாயங்களுக்கான முகாமைத்துவத் திட்டமின்றி வெறும் தன்னார்வச் செயற்பாட்டை மட்டும் ஊக்குவித்ததன் விளைவே ஈழத்தமிழர்களின் எந்த வொரு திட்டமும் துறைசார் ஆற்றலாளர்களின் வளத்துணைகளின்றி அனைத்துல ஈர்ப்பினைப் பெற இயலாதனவாக எதுவித பலனுமின்றிச் செயலிழந்து போயின என்பது வெளிப்படையான உண்மை. இந்த ஆண்டிலாவது ஒருமைப்பாட்டுடன் ஊதியத்துடன் கூடிய செயற்பாட்டாளர்கள் மூலம் செயற்றிட்டங்களை, அதற்கான பொருளாதார பலத்தையும் இணைத்துத் திட்டமிட்டு மனிதவளங்களை உறுதிப்படுத்தி அவற்றின் இலக்கினை அடைய ஈழத்தமிழர்கள் இயன்றளவு முயற்சிக்க வேண்டும் என்பது இலக்கின் இவ்வார எண்ணமாகவுள்ளது.

**ஆசிரியர்**

# இலங்கைக்கு 2025 எவ்வாறு அமையும்?

2024 ஆம் ஆண்டு அதிரடியான அரசியல் மாற்றங்களை ஏற்படுத்திய ஒரு தேர்தல் ஆண்டாக இருந்தது. பிறந்திருக்கும் புதிய ஆண்டும் ஒரு தேர்தல் ஆண்டாகத்தான் இருக்கப்போகின்றது. ஆனால், இந்த வருடத்தில் நடை பெறப்போகும் தேர்தல்கள் அரசியலில் மாற்றங்களை ஏற்படுத்தப் போவதில்லை. கடந்த வருடத்தில் இடம்பெற்ற மாற்றங்களை மேலும் பலப்படுத்தும் ஒரு வருடமாகவே இந்த வருடம் அமையும் என்று எதிர்பார்க்கலாம்.

உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்கள் இந்த வருடத்தில் நிச்சயமாக நடைபெறும். இதற்கான தேர்தல்கள் இரண்டு வருடங்களுக்கு முன்னரே நடைபெற்றிருக்க வேண்டும். அப்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொருளாதார காரணங்களைக் காட்டி அதனை ஒத்திவைத்தார். அது உடனடியாக நடைபெற்றாக வேண்டும். உயர் நீதிமன்றமும் அதற்கான உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

பொதுத் தேர்தல் தோல்வியிலிருந்து எதிர்க்கட்சிகள் இன்னும் மீளவில்லை. அனைத்தும் பிளவுபட்டு, உட்கட்சி முரண்பாடுகளால் தீவிரமான அரசியலை முன்னெடுக்க முடியாமலும், தமது கட்சிகளைக் கட்டியெழுப்ப முடியாமலும் உள்ளன. ஆக, உள்ளூராட்சி தேர்தல்களை நடத்தி, தமது அதிகாரத்தை மேலும் பலப்படுத்துவதற்கு ஆளும் தேசிய மக்கள் முன்னணி நிச்சயமாகத் திட்டமிடும். மார்ச் மாதத்தில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் நடைபெறலாம்.

அதனையடுத்து இவ்வருட நடுப்பகுதியில் மாகாண சபைகளுக்கான தேர்தல்களையும் நடத்தப்போவதாக அரசாங்கம் உறுதியளித்திருக்கின்றது. சுமார் ஆறு வருட காலம் மாகாண சபைகள் செயற்படவில்லை. மாகாண சபைத் தேர்தல் முறையில் திருத்தம் ஒன்றைக் கொண்டு வருவதற்கான முயற்சிகள் முன்னெடுக் கப்பட்ட நிலையிலேயே மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட்டது. இப்போது இதற்கான தேர்தல்களை பழைய முறையில் நடத்துவதற்கு இணக்கம் காணப்பட்டிருக்கின்றது.

மாகாண சபைகளை தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் பிரதான அணியான ஜே.வி.பி. ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால், இந்தியாவின் அழுத்தம் மற்றும், தமிழரசுக் கட்சியுடனான சந்திப்பின் போது, கொடுத்த வாக்குறுதிகளின் அடிப்படையில் மாகாண சபைத் தேர்தல்களை நோக்கி அரசாங்கம் செல்ல வேண்டியிருக்கும். புதிய அரசியலமைப்பு வரும்வரையில், 13 ஆவது திருத்தமும், மாகாண சபை முறையும் தொடரும் என்பதுதான் தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் வாக்குறுதியாகவும் இருந்தது.



தற்போதைய நாட்டின் அரசியல் கள நிலைமைகளின் அடிப்படையில் பார்க்கும் போது தேசிய மக்கள் சக்தியின் செல்வாக்கு உயர்ந்த நிலையில்தான் இருக்கின்றது. விலைவாசி உயர்வு, அரிசி, உப்பு போன்ற சில அத்தியவசியப் பொருட்களின் தட்டுப்பாடு போன்றவற்றால், அரசின் மீது எதிர்க்கட்சிகளால் விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன. ஆனால், எதிர்க்கட்சிகள் பலமானதாகவும், கட்டுக்கோப்பானதாகவும் இல்லை. உட்கட்சி முரண்பாடுகளும் தலைதூக்கி உள்ளன. அதனால், அரசியல் ரீதியாக அநுர அரசாங்கத்துக்கு இந்த வருடத்தில் சவால்கள் எதுவும் உருவாகப் போவதில்லை.

**அகிலன்**

பொருளாதார நிலைமைகளையிட்டுப் பார்க்கும் போது, பெரும்பாலும் ரணில் போட்ட பாதையில்தான் அநுர அரசும் பயணிக்கின்றது. முக்கியமாக, சர்வதேச நாணய நிதியத்தின் உதவிகளைப் பொறுத்தவரையில் ஏற்கனவே இருக்கும் உடன்படிக்கையைத் தொடர்வது என்பதுதான் அவர்களுடைய திட்டமாகவும் இருக்கின்றது. அதேவேளையில், மேற்கு நாடுகளுடனான உறவுகளைத் தொடர்வது, பிறிக்ஸ் கூட்டமைப்பில் இணைவது என்பனவும் அநுர அரசின் வெளியுறவுக் கொள்கையின் முக்கிய அம்சங்களாக இருக்கப்போகின்றது. இது பெருமளவுக்குப் பொருளாதார நலன்களை அடிப்படையாகக் கொண்டதாகவே இருக்கும்.

பொருளாதார ஸ்திரத் தன்மையைப் பேண வேண்டும் என்பதிலும் அரசாங்கம் அக்கறையாக இருக்கின்றது. அநுர ஜனாதிபதியாகியிருக்கும் அதேவேளையில், நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்றிருப்பதும் அரசியல் ரீதியில் ஒரு ஸ்திரத் தன்மையைக் கொடுத்திருக்கின்றது. அண்மைக்காலத்தில் டொலரின் பெறுமதி 300 க்கு குறைவாக வந்திருப்பது பொருளாதார ரீதியில் இலங்கை உறுதியாக நிலைக்கு வந்துகொண்டிருப் பதை மட்டுமன்றி, அதனை சர்வதேசம் உணர்ந்து கொண்டிருப்பதையும் வெளிப்படுத்துகின்றது.

பொருளாதாரத்தைப் பலப்படுத்துவதற்கும், அதனை ஸ்திரமாகப் பேணிக்கொள்வதற்கும் அந்நியச் செலாவணியை அதிகளவுக்கு பெற்றுக் கொள்வதற்காக உபாயங்கள் அவசியம். அந்த வகையிலான சில திட்டங்களை அரசாங்கம் வகுத்து வருவதாகவும் தெரிகின்றது. குறிப்பாக உல்லாசப் பயணத்துறையின் வளர்ச்சியில் அரசாங்கம் அக்கறை காட்டுகின்றது. அதன்மூலமாக மட்டுமே உடனடியாக அதிகளவுக்கு அந்நியச் சொலாவணியைப் பெற்றுக்கொள்ள முடியும்.

2024 இல் இருபது லட்சத்துக்கும் அதிகமான உல்லாசப் பயணிகள் இலங்கை வந்துள்ளார்கள். 2018 க்குப் பின்னர் இதுதான் அதிக தொகையாகும்.உயிர்த்த ஞாயிறு தாக்குதல், கோவிட் பெருந் தொற்று மற்றும் பொருளாதார நெருக்கடி போன்றவற்றால் படுத்துக்கிடந்த உல்லாசப் பயணத்துறை 2024 புத்தெழுச்சி பெற்றிருப்பதை காணலாம். இதன் மூலம் அதிக வருமானமும் நாட்டுக்கு கிடைத்தது. டொலரின் பெறுமதி குறைவடைய அதுவும் காரணம். 2025 இல் இதனை மேலும் அதிகரிப்பதற்கு அநுர அரசு திட்டமிடுகின்றது.

உல்லாசப் பயணத்துறையை வளர்ப்பதற்கு அரசுக்கு சாதகமான பல விடயங்கள் உள்ளன. குறிப்பாக, சீனாவுடனான நட்பு அவர்களுக்கு இந்த விடயத்தில் பெருமளவுக்கு உதவும். தமது நாட்டின் உல்லாசப் பயணிகளில் அதிகமானோரை இவ்வருடத்தில் இலங்கைக்கே அனுப்பப் போவதாக சீனா ஏற்கனவே இலங்கைக்கு உறுதியளித் திருக்கின்றது. அது பல இலட்சங்களாக இருக்கலாம். அதே வேளையில், இந்தியாவிலிருந்தும் அதிகளவு உல்லாசப் பயணிகள் இலங்கை வருவதற்கான வாய்ப்புக்கள் உள்ளது.

இதன் மூலமாகக் கிடைக்கக்கூடிய அந்நியச்செலாவாணி இலங்கையின் பொருளாதாரத்தை மேலும் பலப்படுத் துவதற்கு வழிவகுக்கலாம். இவ்வருடத்தில் 30 இலட்சம் உல்லாசப் பயணிகளை இலக்கு வைத் துச் செயற்படப் போவதாக அரசாங்கம் கூறி யிருக்கின்றது. நாட்டின் ஸ்திரத்தன்மை உறுதிப்படுத்தப்பட்டிருப் பதால், அந்த இலக்கை அடைவது கடினமானதாக இருக்காது. ஆனால், இவ் வளவு உல்லாசப் பயணிகள் வரும்போது, அதற்கான கட்டமைப்புக்களையும் உருவாக்கிக்கொள்வது அவசியம்.



2024 இறுதியில் இந்தியாவுக்குச் சென்று வந்த ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க, இம்மாதம் சீனாவுக்குச் செல்கின்றார். சீனாவிடமிருந்து அதிகளவுக்கு பொருளாதார நலன்களைத்தான் இலங்கை எதிர்பார்க்கின்றது. ஜனாதிபதி விரும்பும் எந்தவொரு திட்டத்தையும் முழுமையாக நிறைவேற்றித் தருவதற்காக பொறுப்பை ஏற்பதாக சீன ஜனாதிபதி ஷி ஜின் பிங் உறுதியளித்திருக்கின்றார். ஜனாதிபதியின் சீன பயணம் தொடர்பிலான திட்டங்களை வகுக்கும் நோக்கில் இலங்கை வந்திருந்த சீன மக்கள் அரசியல் ஆலோசனை மாநாட்டின் பிரதித் தலைவர் கின் போயோங், சீன ஜனாதிபதியின் இந்த செய்தியை அநுரகுமார திசாநாயக்கவிடம் தெரிவித்துள்ளார்.

இலங்கை எவ்வாறான ஒரு திட்டத்தை முன்வைக்கப்போகின்றது, இது தொடர்பில் இந்தியாவின் பிரதிபலிப்பு எவ்வாறானதாக இருக்கும் என்ற கேள்விகள் இப்போது எழுகின்றன. ஏற்கனவே அம்பாந்தோட்டை துறைமுகம், கொழும்பு துறைமுக நகரம் என்பன சீனாவினால் அமைக்கப்பட்டன. இவை தொடர்பில் இந்தியாவின் கரிசனை உள்ள நிலையில், புதிதாக எவ்வாறான திட்டத்தில் சீனா இறங்கப்போகின்றது என்ற கேள்விதான் இப்போது கொழும்பு இராஜதந்திர வட்டாரங்களில் எழுந்துள்ளது.

இலங்கையின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கு சீனாவின் உதவி அநுரவுக்கு தவிர்க்க முடியாததாக இருக்கின்றது. மறுபுறம், இந்த உதவிகளை வழங்குவதன் மூலமாக தமது பிராந்திய கேந்திர நலன்களைப் பாதுகாத்துக் கொள்வதும் பலப்படுத்திக் கொள்வதும் சீனாவின் இலக்காக இருக்கும். குறிப்பாக, கடந்த வருடத்தில் இலங்கைக்குள் பிரவேசிப்பதற்கு தடை செய்யப்பட்ட ஆய்வுக் கப்பல்களை பிராந்தி

தொடர்ச்சி 16ஆம் பக்கம்

# புலம்பெயர்ந்தவர்களுக்கு எதிராகத் தொடரும் கைதுகளும் வழக்குகளும்:





## சட்டவாளர் தவராசா

**அனைத்துலக உயிரோடைத் தமிழ் வானொலியின் தாயகக்கள நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சட்டவாளர் தவராசா அவர்கள் முன்வைத்த கருத்துக்களை இலக்கின் வாசகர்களுக்காக இங்கே தருகின்றோம். இந்த நேர்காணலை காணொளியில் YouTube இல் முழுமையாகப் பார்ப்பதற்கு இங்குள்ள QR Code இனை ஸ்கான்(Scan) செய்யவும்.**

**ஐக்கிய ராஜ்ஜியத்திலிருந்து இலங்கை வந்திருந்த ஒரு ஈழத் தமிழர் கைது செய்யப்பட்டிருந்தார். அவர் மேல் போடப்பட்ட வழக்கு, ஐக்கிய ராஜ்ஜியத்திலே உலகத் தமிழர் பேரவையுடன் இணைந்து பணம் சேகரித்தார் என்பதுதான். 2009 ஆம் ஆண்டுக்கு பிற்பாடு ஐக்கிய ராஜ்ஜியம் வந்ததாகவும் 2012 ஆம் ஆண்டு அவர் மேல் ஒரு வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்ததாகவும் நாங்கள் அறிகின்றோம். இது பற்றி உங்களுடைய கருத்து?**

இந்த சம்பவத்தைப் பொறுத்தவரைக்கும் நிச்சயமாக நாங்கள் கலந்துரையாட வேண்டும். 2009 ஆம் ஆண்டு யுத்தம் மௌனிக்கப்பட்ட பின்னர் ஆயிரக்கணக்கான இளைஞர்கள், யுவதி கள் கைது செய்யப்பட்டார்கள். அதன் பின் பெரும்பான்மையானோர் விடுதலை செய்யப்பட்டார்கள். அதிலே நவம்பர் 30 ஆம் திகதி கைது செய்யப்பட்ட பிரித்தானிய பிரஜையும் விடுதலை செய்யப்பட்டார்.

2009 ஆம் ஆண்டு விடுதலை செய்யப்பட்ட பின், அவர் 2010 ஆம் ஆண்டு பிரித்தானியா சென்று 2024 ஆம் ஆண்டு நவம்பர் 30 ஆம் திகதி வரைக்கும் அவர் இலங்கைக்கு பயணம் செய்யவில்லை.

ஆனால் அவர் பிரித்தானிய பிரஜையாகிய பின், ஒரு மகன் என்ற முறையில் தனது தாயாரின் இறுதி கிரிகையில் கலந்து கொள்வதற்காக வந்தார். இந்த சூழலில் முன்னதாக அவருக்கு எதிராக கட்டுநாயக விமான நிலையத்தில் விதிக்கப்பட்டிருந்த பயணத்தடை அடிப்படையில் அவர் கைது செய்யப்பட்டார். அவருடைய அந்த கைது நடவடிக்கை நடந்த பின் அவருடைய தாயாருடைய மரண நிகழ்வில் கலந்து கொள்ள அனுமதிக்கப்பட்டது.

அதன் பிறகு இந்த வழக்கு டிசம்பர்6 மற்றும் டிசம்பர் 17 ஆம் திகதிக்கும் தவணையிடப்பட்டது. இந்த வழக்கில், குறித்த நபர் மீது காவல்துறையினர் சுமத்தியுள்ள குற்றச்சாட்டு என்னவெனில், 2012 ஆம் ஆண்டு பிரித்தானியாவில் உலக தமிழ் பேரவையுடன் இணைந்து நிதி சேகரித்ததாக கூறப்பட்டுள்ளது. மேலும் உலக தமிழ் பேரவையின் முக்கியஸ்தர்களுடைய பெயர்களையும் குறிப்பிட்டு முதல் அறிக்கையைத் தாக்கல் செய்துள்ளனர்.

இதில் முக்கிய அம்சம் என்னவென்றால் நிதியை சேகரித்தது மட்டுமன்றி நிதியை சேகரித்து விடுதலைப் புலிகள் மீள் உருவாக்கத்திற்காகவும் புலனாய்வுக்காகவும் போலி கடவுச் சீட்டில் இலங்கை வந்து யாழ் நகர் மற்றும் வவுனியாக்குச் சென்று இந்த நிதி வழங்கப்பட்டது என்பதுதான்.

அத்தோடு அவரைக் கைது செய்த பொழுது அவருடைய பெயரும் இலங்கை கடவுச் சீட்டினுடைய இலக்கம் ஒன்றும் அங்கே குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால் அவர் பிரித்தானியாவில் இருந்து வந்து கடவுச் சீட்டை கையளித்தபோது அவர்கள் அந்த பெயரையும் பிறந்த தேசத்தையும் வைத்து தான் அவரை கைது செய்திருக்கிறார்கள்.

இவ்வாறு கைது செய்தவர்கள், விசாரணையில் நிதியைச் சேகரித்து இலங்கைக்கு வந்து கையளித்ததாக கூறியபோதும் அந்த நிதி யாருக்கு கொடுக்கப்பட்டது என்ற ஒரு எந்த விளக்கமும் கொடுக்கப்படவில்லை.

முக்கியமாக என்னவென்றால் காவல்துறையினரால் தாக்கல் செய்யப்பட்ட அறிக்கைகள், ஒன்று இரண்டு அல்ல. 2009 ஆம் ஆண்டு இவருக்கு எதிராக ஒரு வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. 2012 ஆம் ஆண்டு இந்த அறிக்கை தாக்கல் செய்திருக்கிறார்கள் இரண்டு மூன்று அறிக்கைகளை அதாவது குற்றப்புலனாய்வு பிரிவினரும் பயங்கரவாத தடைப் பிரிவினரும் தாக்கல் செய்திருக்கிறார்கள்.

ஆனால் காவல்துறையினர் கூறுவது போல் அவர் மீதான குற்றச்சாட்டுக்களுக்கு எந்தவிதமான சான்றுகளும் இல்லை.

**இந்த கைது நடவடிக்கை ஒரு முரண்பாடாக இருக்கிறது. ஏனென்றால் உலகத் தமிழர் பேரவையினுடைய முக்கிய பிரதிநிதிகள் தாயகத்தில் இமாலய பிரகடனத்திற்காக உழைத்துக் கொண்டிருக்கின்றார்கள். அந்த உலகத் தமிழர் பேரவையுடன் இணைந்து பணம் சேர்த்தார் என்பதற்காக ஒருவர் அங்கு கைது செய்யப்படுகின்றார். இது ஒவ்வுதலாக இல்லை அல்லவா?**

நிச்சயமாக, நான் பயங்கரவாத தடை சட்டத்திலும் அவசர விதிகளின் கீழேயும் ஆயிரத்துக்கு மேற்பட்ட வழக்குகள் செய்திருக்கிறேன். ஆனால் நிதி சேகரித்தாக பல வழக்குகள் இருந்த பொழுதும் எனக்கு முதல் முதலாக 'உலகத் தமிழ் பேரவையுடன் இணைந்து...' என்ற ஒரு வசனம் குறிப்பிடப்பட்டிருப்பது இந்த 2012 ஆம் அறிக்கையில் மட்டும்தான்.

உலகத் தமிழ் பேரவை நிதி சேகரித்தாக என்னுடைய சட்டத்துறை வரலாற்றிலே, பயங்கரவாத தடைச் சட்டம் அல்லது அவசர கால ஒழுங்குவிதியின் கீழேயோ 'உலகத் தமிழ் பேரவை' குறிப்பிடப்படவில்லை.

**இப்படியான வழக்குகள் ஏற்கனவே பதிவு செய்யப்பட்டிருப்பதால், புலத்திலிருந்து இலங்கை வருபவர்களைக் கைது செய்யப் படக்கூடிய நிலை இருக்கிறது எனக் கூறுகின்றீர்கள்?**

இல்லை. இந்த வழக்கைப் பொறுத்த வரைக்கும் தனிப்பட்ட ஒரு பிரித்தானிய பிரஜையைப் பாதிக்கவில்லை. பாதித்ததாக இருந்தாலும் கூட ஈழத்திலிருந்து புலம்பெயர்ந்த எங்கள் உறவுகள் அனைவருக்கும் ஒரு பாதிப்பை உண்டாக்கிய வழக்கு இது என்பதை மறந்துவிட முடியாது. ஏனென்றால் ஒருவருக்கும் தனக்கு எதிராக தடையாணை ஒன்று பெறப்பட்டிருக்கா இல்லையா என்பது கூட தெரியாது. அதாவது சாதாரணமாக ஒரு நிரபராதி கூட தண்டிக்கப்படலாம். அப்படியான ஒரு வழக்கு என்பதால் எனக்கு பல நூற்றுக்கணக்கான தொலைபேசி அழைப்புகள் வந்தன. ஒரு குற்றம் செய்திருந்தால் அது வேறு விடயம். ஆனால் இவ்வாறான வழக்குகள் எல்லோருக்குமே பிரச்சினை.

உதாரணமாக A கைது செய்யப்படுகிறார். A கைது செய்யப்படும் பொழுது அவர் B யும் நானும் சேர்ந்து தான் செய்தோம் என்று இன்னொரு நபரையும் சேர்த்துதான் குறிப்பிடுகிறார்.

இந்த நிலையில் காவல்துறையினர் அறிக்கையை தாக்கல் செய்யும் பொழுது B யையும் சேர்த்துதான் அறிக்கையை தாக்கல் செய்கின்றனர். அதாவது இப்ப இந்த பிரித்தானியாவில் இருந்து வந்த இந்த பிரஜைக்காக மட்டும் ஒரு அறிக்கை தாக்கல் செய்யப்படவில்லை. கொட்டகணையில் இருக்கின்ற பெண்மணியினுடைய பெயரையும் குறிப்பிட்டு இவர்கள் இருவருக்கும் எதிராகத்தான் தடை அனுமதி அதாவது பயணத்தடை விதிக்கப்பட்டிருக்கிறது. வழக்கும் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.

• • •

# தமிழ்த்தேசியம் ...!

# தடம் மாறுகிறதா தடுமாறுகிறதா?

பா.அரியநேத்திரன்

தமிழ்த்தேசியம் என்பது ஈழத்தமிழர்களுடைய அரசியலில் பின்னிப்பிணைந்த ஒன்று அப்படி பின்னிப்பிணைவதற்கு அத்திவாரம் இட்டவர் தந்தை செல்வாதான்.

அவரின் சிந்தனையில் உதித்த வெளிப்பாடாகவே 1949, டிசம்பர், 18இல் உருவாகி கடந்த 2024, டிசம்பர்,18இல் 75, வருட வரலாற்றை கொண்ட தாய்க்கட்சியாக கருதப்படும் இலங்கைத் தமிழ் அரசுக்கட்சியாகும்.

தந்தை செல்வா ஆரம்பித்து வளர்த்த இலங்கைத்தமிழ் அரசு கட்சியின் இன்றைய நிலைமையை எண்ணி தமிழினம் அழுவதா, சிரிப்பதா? அந்த கட்சியின் தலைவர், செயலாளர் உள்ளிட்ட பதவி போட்டிகளும் சண்டைகளும் ஏற்படுவதோடு, பதவிக்காக இரு நீதிமன்றங்களை நாடும் நிலைமையும் காணப்படுகிறது. இத்தகைய கட்சியின் ஒற்றுமையின்மையால் கடந்த 2024, ஜனவரி,21இல் கட்சி தலைவர் போட்டியில் தொடங்கிய முரண்பாடு 2024, டிசம்பர், 28இல் கட்சி தலைவர் மாவை சேனாதிராசாவை வெளியேற்றும் நிலையில் அந்த கட்சி நிலைமை சென்றுள்ளது.



பதவிப்போட்டியின் உச்ச நிலை நீதிமன்றத்தில் நான்கு வழக்குகளுடனும், கட்சியில் உள்ள சிரேஷ்ட உறுப்பினர்கள் வெளியேறுவதும், வெளியேற்றப்படுவதும், ஒற்றுமை இன்மையால் சேர்ந்து கொள்கை ரீதியாக ஒருமித்த முடிவை எடுக்கமுடியாத இரண்டு அணிகளாக சிதைவடைந்துள்ளன.

கடந்த 2024இல் இலங்கையில் இரண்டு முக்கிய தேர்தல்கள் இடம்பெற்ற போது தமிழரசுக் கட்சியால் ஒருமித்து ஒருமுடிவுடன் கட்சியில் உள்ள அரசியல்குழுவோ, மத்தியகுழுவோ முடிவு எடுக்க முடியாமல் காலத்தை கடத்தி ஜனாதிபதி தேர்தலில்தமிழ்தேசிய கொள்கையை முன்னிறுத்தி தமிழ் பொதுவேட்பாளராக பா.அரியநேத்திரனை சுயேட்சையாக வேட்பாளராக வேட்பு மனுதாக்கல் செய்த பின்னரே 15, நாட்கள் கடந்து அந்த பொதுவேட்பாளரை தோற்கடிக்க வேண்டும் என்பதற்காகவே சஜீத்பிரமதாசாவை ஆதரிப்பதாக 42, மத்தியகுழு உறுப்பினர்களை கொண்ட தமிழரசுக்கட்சியில் 16, உறுப்பினர்கள் சேர்ந்து முடிவை எடுத்தனர்.

ஜனாதிபதி தேர்தலுக்கான வேட்பு மனுதாக்கல் 15.08.2024ல் இடம்பெற்றது. அதில் ஒரு வேட்பாளராக 82, சிவில் அமைப்புகளும், 7, தமிழ்த்தேசிய கட்சிகளும், சகல புலம்பெயர்



அமைப்புகளும், யாழ்ப்பாணம் கிழக்கு பல கலைக்கழக மாணவர் அமைப்பு, முன்னாள் போராளிகள், தமிழ் வர்த்தக சங்கம், காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கம் என சகல தமிழ் அமைப்புகளும் எடுத்த முடிவால் தமிழ் பொது வேட்பாளராக பா.அரியநேத்திரன் சங்கு சின்னத்தில் சுயேட்சையாக வேட்பு மனுவை தாக்கல் செய்திருந்தார்.

தமிழரசுக்கட்சியின் மத்தியகுழு 16, உறுப்பினர்கள் சஜீத் பிரமதாசாவை ஆதரிக்கும் தீர்மானம் வவுனியாவில் 01.09.2024இல் எடுக்கப்பட்டது. இந்த கூட்டத்தில் தலைவர் மாவை சேனாதிராசாவோ, புதிய தலைவர் சிறிதரனோ அன்று கலந்து கொள்ளவில்லை.



ஜனாதிபதி தேர்தல் 21.09.2024 ல் இடம்பெற்று தேர்தல் முடிவில் வடக்கு கிழக்கில் உள்ள எட்டு மாவட்டங்களில் இருந்து 226343, வாக்குகளை பா.அரியநேத்திரன் பெற்று இலங்கையில் 5, வது இடத்தை பெற்றது மட்டுமல்ல வடகிழக்கு தமிழ் மக்கள் இணைந்த வடகிழக்கில் உறுதியாக உள்ளனர் என்பது காட்டப்பட்டது.

**ஜனாதிபதியாக அநுர தெரிவானார்.**

ஜனாதிபதி தேர்தலில் தமிழ் பொது வேட்பாளரை தமிழ் மக்கள் ஆதரித் தமையால் அதனால் மூன்று விடயத்தை இலங்கை அரசுக்கும், சர்வதேசத்துக்கும் தமிழ் பொது வேட்பாளரின் தேர்தல் முடிவு காட்டப்பட்டது.

**1. 2006இல் இணைந்த வடகிழக்கு மாகாணத்தை ஜே.வி.பி கட்சியால் சட்ட ரீதியாக நீதிமன்றத்தால் பிரிக்கப்பட்டாலும் வடகிழக்கில் உள்ள தமிழ் மக்களின் மனங்களால் அதை பிரிக்க முடியாது என்பது நிருபிக்கப்பட்டது.**

**2. வடக்கு கிழக்கு என்ற பிரதேசவாதம் (மட்டக்களப்பான், யாழ்ப்பாணத்தான்) என்ற பிரதேசவாதம் முறியடிக்கப்பட்டது, மட்டக்களப்பை சேர்ந்த ஒருவருக்கு வடக்கில் யாழ்ப்பாணம், வன்னி மாவட்டங்களில் மட்டும் 116000, வாக்குகள் கிடைத்து பிரதேசவாதத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது.**

**3. போர் முடிந்து 15, வருடங்கள் கடந்தாலும் வடகிழக்கு தமிழ்மக்கள் சமஷ்டி அடிப்படையிலான அரசியல் தீர்வில் இன்றும் உறுதியாக உள்ளனர் என்பது மீண்டும் ஜனநாயக ரீதியாக நிருபிக்கப்பட்டது.**

இந்த மூன்று விடயங்களும் ஜனாதிபதி தேர்தலில் தமிழ் பொதுவேட்பாளர் மூலம் அடைந்த வெற்றிகள் என்பதை மறுதலிக்க முடியாது.

ஜனாதிபதி தேர்தலில் இலங்கை தமிழ் அரசுக்கட்சி மத்தியகுழுவில் சிலரால் எடுக்கப்பட்ட தீர்மானத்தின்படி அவர்களால் ஆதரித்த சஜீத் பிரமதாசா தெரிவாகவில்லை. அவர்தான் ஜனாதிபதியாக தெரிவாகுவார் என்றே தமிழரசுக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களால் பிரசாரம் செய்யப்பட்டது. அது தவறான கணிப்பீடாகவே தேர்தல் முடிவுகள் அமைந்தது.



ஜனாதிபதி தேர்தல் முடிந்து புதிய ஜனாதிபதியாக தெரிவான தேசிய மக்கள் சக்தி அநுரகுமார திசநாயக்கா பதவி ஏற்று மூன்று தினங்களால் பாராளுமன்றத்தை கலைத்து தேர்தலுக்கான வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்பட்டது.

அதனால் பொதுத்தேர்தலில் வேட்பாளர்களை தெரிவு செய்வதற்கான தமிழரசுக்கட்சி மத்தியகுழுவால் 01,10,2024இல் தேர்தல் நியமனக்குழு 11 பேர் தெரிவு செய்யப்பட்டனர்.

1. மாவை சேனாதிராஜா, யாழ்ப்பாணம்.
2. ப.சத்தியலிங்கம், வவுனியா.
3. எம்.ஏ.சுமந்திரன், யாழ்ப்பாணம்.
4. சி.சிறிதரன், யாழ்ப்பாணம்.
5. இரா.சாணக்கியன், மட்டக்களப்பு.
6. த.கலையரசன், அம்பாறை.
7. ச.குகதாசன். திருகோணமலை
8. சி.வி.கே.சிவஞானம், யாழ்ப்பாணம்.

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

கட்டுரை

# அநுர அரசாங்கத்திலும் காணி அபகரிப்பா
# கொந்தளிக்கும் திருமலை மக்கள்



## ஹஸ்பர் ஏ ஹலீம்

கடந்த கால அரசாங்கங்கள் தொடக்கம் இற்றை வரை மக்களின் நிலங்கள் அபகரிக்கப்பட்டு வருகிறது.

குறிப்பாக வடக்கு கிழக்கில் தமிழ் மற்றும் முஸ்லீம் சமூகங்களின் விவசாய , குடியிருப்பு காணிகள் கபளீகரம் செய்யப்படுகிறது. இதனடிப் படையில் திருகோணமலை மாவட்டத்தில் உள்ள குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவு, திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலாளர் பிரிவில் நில ஆக்கிரமிப்பு தொடர்வதால் மக்கள் கொந்தளிக்கும் நிலை தற்போது ஏற்பட்டுள்ளது.



தற்போதைய தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் நாட்டை பொறுப்பேற்றதன் பின்பும் கூட நில அபகரிப்புக்கு தீர்வு இல்லாமல் காணப் படுகிறது. திருகோணமலை மாவட்டத்தில் உள்ள திரியாய், முத்து நகர், சம்பூர் உள்ளிட்ட தனியார் விவசாய மற்றும் குடியிருப்பு காணிகளை, தொல் பொருள் திணைக்களம், வனஜீவராசிகள் திணைக்களம்,இலங்கை துறை முக அதிகார சபை உள்ளிட்ட பல அரச திணைக்களங்கள் பௌத்த பிக்குகள் போன்றோர் அபிவிருத்தி என்ற போர்வையிலும் புனித பூமி என்ற போர்வையிலும் அடாத்தாக நிலங்களை அபகரித்துள்ளனர்.

இதன் ஒரு பகுதியாக திருகோணமலை மாவட்ட திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலகத்துக்குட்பட்ட முத்து நகர் பகுதி விவசாயிகள் *2025.01.03* அன்று கவனயீர்ப்பு போராட்டமொன்றை முன்னெடுத்தனர்.

குறித்த கவனயீர்ப்பானது திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலகம் முன்பாக இடம் பெற்றது.முத்து நகர் பகுதியில் உள்ள விவசாய காணிகளை சூரிய மின் உற்பத்தி நிறுவனத்துக்குக் வழங்க வேண்டாம் என கோரி கவனயீர்ப்பில் ஈடுபட்டனர்.

குறித்த கவனயீர்ப்பை முத்து நகர் ஒன்றிணைந்த அனைத்து விவசாய சம்மேளனங்கள் மேற் கொண்டிருந்தனர்

குறித்த கவனயீர்ப்பில் விவசாய காணியை அபகரிக்காதே, வயிற்று பசிக்கு சோலர் பவரா, மாவட்ட தலைவரே உங்கள் கவனத்திற்கு, என பல வாசகங்களை ஏந்தியவாறும் கவனயீர்ப்பில் ஈடுபட்டனர்.

குறித்த முத்து நகர் பகுதியில் ஐந்து சிறு குளங்களை கொண்ட *1600*ஏக்கருக்கும் மேற்பட்ட நிலப்பரப்பில் *1200* விவசாயிகள் விவசாய செய்கையில் ஈடுபட்டு வருகின்றனர் *.50* ஏக்கருக்கும் மேற்பட்ட மேட்டு நிலப் பயிர்களுக்கும் இதில் மேற்கொள்ளப்பட்டு சுமார் *5000* குடும்பங்கள் பயனடைகின்றனர். கடந்த வருடத்தில் *(2024)* வாரி சௌபாக்கியா திட்டத் தின் கீழ் அரசாங்கம் குளங்களை திருத்த நிதி ஒதுக்கீடு செய்தது. தகரவெட்டுவான் குளம் *80* வீதம் திருத்தப்பட்ட நிலையில் இலங்கை துறை முக அதிகார சபையால் நிறுத்தப்பட்டது .இதே போல் அம்மன் குளத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதிக்கு திருத்தம் செய்ய அனுமதியை மறுத்து தடுத்து நிறுத்தியதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் விவசாய சங்கத்தின் பிரதிநிதி ஒருவர் ' சோளர் பவர் திட்டத்தை எமது விவசாய பகுதிக்குள் நடை முறைப்படுத்தினால் குளங்கள் மூடப்படலாம். எப்படி அபிவிருத்தி செய்வது. நாட்டுக்கு வருடந்தோரும் பெரும் போகத்தில் *1600 ஏக்கர் X70 புசல் = 112000* நெல்லை உற்பத்தி செய்து தரும் எமது வாழ்வாதார ஜீவனோபாய வயல் நிலங்கள் பறிக்கப்படுமாக இருந்தால் விவசாயிகள் இத் திட்டத்தை எதிர்த்து போராடுவதன் மூலம் நாம் உயிரை விடவும் ஆயத்தமாக உள்ளோம். எனவே தயவு கூர்ந்து இந்த வயற் காணி அபகரிப்பை தடுத்து நிறுத்தி நாங்கள் வேளாண்மையைத் தொடர்ந்து செய்கை பண்ண நிலத்தை விடுவித்து தாருங்கள் என தெரிவித்தார்.

இதன் போது மஹஜர் ஒன்றினை திரு கோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் களான ரொசான் அக்மீமன , சண்முகம் குகதாசன் ஆகியோரிடத்தில் கையளித்தனர்.

இது தவிர சம்பூர் பகுதியில் அனல் மின் நிலையம் ஒன்றை அமைக்க எதிர்பார்த்துள்ள நிலையில் மக்கள் இதனை தடுக்க வேண்டும் என்ற கோரிக்கையினை முன்வைத்துள்ளனர். அமெரிக்காவை தலைமையகமாக கொண்டு இயங்கும் ஒக்லேண்ட் அறிக்கையின் பிரகாரம், திருகோணமலை மாவட்டத்தில் குச்சவெளி பிரதேச செயலக பகுதியில் தான் அதிகளவான நில அபகரிப்புகள் இடம் பெற்றுள்ளதாக தெரி விக்கப்படுகிறது. தற்போதைய அரசாங்கம் பொய் சொல்லி ஆட்சிக்கு வந்தார்களா என்ற சந்தேகம் எழுகின்றது .அண்மையில் கிளீன் சிறிலங்கா வேலைத் திட்டத்தை அரசாங்கம் ஆரம்பித்து வைத்த போதிலும் குறிப்பிட்ட குழுவில் சிறுபான்மை சமூகத்தை சேர்ந்த எவரும் நியமிக்கப்படவில்லை என்பதனால் சிறுபான்மை மக்கள் மீது அரசு பாரபட்சம் காட்டுகின்றதா என்ற கேள்வி எழுந்துள்ளது.

இவ்வாறாக தொடர்ச்சியான நில அபகரிப் பால் மக்கள் மன உளைச்சலுக்கு ஆளாகியுள்ளனர். நில மீட்பு போராட்டம் ஒன்று தொல்லியல் திணைக்களத்தினால் காணிகள் கையகப்படுத்தும் நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து குச்சவெளி பிரதேச செயலகத்திற்கு முன்பாக புது வருடப் பிறப்பன்று *(01.01.2025)* மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

திருகோணமலை குச்சவெளி பிரதேசத்தில் தொல்லியல் சின்னங்கள் இல்லாத தனியாருக்கு சொந்தமான காணிகளையும், பிரதேச சபைக்கு சொந்தமான காணிகளையும் தொல்லியல் திணைக்களம் கையகப்படுத்தும் நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்தே அப்பகுதி மக்கள் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இதன்போது "புதைபொருள் திணைக் களமே குச்சவெளி சந்தைக்கட்டட காணியை புதைக்காதே", "தொல்பொருள் திணைக்களமே குச்சவெளி நெற்களஞ்சிய கட்டடத்திற்கு தொல்லை தராதே" "தொல்பொருள் அதிகாரிகளே சிங்கள, தமிழ், முஸ்லீம் மக்களிடையே வேற்றுமையை உண்டாக்காதே", போன்ற வாசகங்கள் அடங்கிய பதாதைகளை ஏந்தியும், கோசங்கள் எழுப்பப்பட்டது.



மேலும் குறித்த காணிகளை கையகப் படுத்தும் முகமாக அப்பகுதிகளில் எவ்வித அறிவித்தலும் இன்றி இரவோடு இரவாக பெயர்ப்பலகையை காட்சிப்படுத்தியுள்ளதாகவும் இந்த காணிகளில் தொல்லியல் சின்னங்கள் எவையும் இல்லாத நிலையில் தொல்லியல் திணைக்களம் இந்த காணிகளை கையகப்படுத்த முயற்சிப்பதாகவும் மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

அத்துடன் பிரதேச சபைக்குச் சொந்த மான *1985*ஆம் ஆண்டுக்கு முன்னர் கடைத் தொகுதிகளுடன் காணப்பட்ட பகுதியும் மற்றுமொரு இடத்தில் நெற் களஞ்சியமாக காணப்பட்ட பழைய கட்டடங்களுடன் கூடிய பகுதியையும் தொல்லியலுக்குரிய இடமாக கையகப்படுத்த நடவடிக்கை எடுத்து வருவதாகவும் இதனால் தங்களுடைய வாழ்வாதாரம் பாதிக் கப்படும் எனவும் இதை அனுமதிக்க முடியாது எனவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் குறித்த சட்ட விரோதமான

தொடர்ச்சி 16ஆம் பக்கம்

கட்டுரை



# தமிழக முன்னாள் முதலமைச்சர் எம்ஜிஆரின் சேவைகளை நினைவுகூரும் யாழ்ப்பாணம்..!

## இறுதிப் பகுதி

ஈழத்தில் புகழ் பெற்ற பல மட்டங்களிலும் செல்வாக்குமிக்க நடிகராகத் திகழ்ந்த எம்.ஜி.இராமச்சந்திரன் அவர்களின் பெயரில் பல இரசிகர் மன்றங்கள் உருவாக்கப்பட்டன. அவையும் பல பொதுப் பணிகளில் ஈடுபட்டு வந்ததால் எம்ஜிஆரின் புகழைப் பரப்பி வந்தன. ஒரு தடவை இரசிகர்களின் விருப்பத்தை ஏற்று பிரபல நடிகை பி.சரோஜாதேவியுடன் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்தபொழுது யாழ்ப்பாணம் எங்கும் அமோக வரவேற்பு அளிக்கப்பட்டது.இதில் பல இலட்சக் கணக்கான மக்கள் கலந்து கொண்டனர்.



வடக்கு கிழக்கில் ஸ்ரீலங்கா இராணு வத்தினரின் அடக்கு முறைகள் மற்றும் தமிழ் இனத்துக்கு எதிரான படுகொலைகள் இடம் பெற்றதைத் தொடர்ந்து இளைஞர்கள் ஆயுதம் ஏந்திப் போராடும் நிலைக்குத் தள்ளப்பட்ட னர். அந்தக் காலத்தில் பலம் வாய்ந்த ஒரு விடுதலை இயக்கமாக மேதகு வேலுப்பிள்ளை அவர்களின் தலைமையிலான தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின்மீது தமிழ் மக்கள் நம்பிக்கை வைத்து வே.பிரபாகரன் அவர்களைத் தமது தலைவராக ஏற்று அவரைப் பின்பற்றியதால், ஈழ விடுதலைப் போராட்டம் புதிய பரிமாணத்தை எடுத்தது. ஸ்ரீலங்கா இராணுவத்தினருக்கு எதிரான பல தாக்குதல்கள் பல முனைகளிலும் இடம் பெற்றதால் யாழ்ப்பாணக் குடாநாட்டைப் புலிகள் கைப்பற்றி இராணுவத்தினரை முகாம் களுக்குள் முடக்கியிருந்தனர். போராட்டம் ஆரம் பித்த காலத்திலேயே தமிழ் இளைஞர்களுக் கான போர்ப் பயிற்சிகள் தமிழகத்திலேயே இடம் பெற்றது. இதில் முதலமைச்சர் எம். ஜி.இராமச்சந்திரன் பல வழிகளிலும் பிரபாகரன் அவர்களுக்குத் தனது ஒத்துழைப்பையும் பல கோடிக் கணக்கான இந்திய ரூபாய்களையும் வழங்கி விடுதலைப் புலிகள் இயக்கத்தின் வளர்ச் சிக்கு உறுதுணையாக இருந்தார்.



வல்வை.ந.அனந்தராஜ்

ஒரு தடவை தி.மு.க. தலைவர் மு.கருணா நிதி தமிழகத்தில் இருந்த ஈழ விடுதலை ஆயுதக் குழுக்கள் ஒவ்வொன்றிற்கும் தனது அன்பளிப்பாக ஐம்பதாயிரம் ரூபாவை ஒவ்வொரு கட்சியின் தலைவர்களையும் தனது வீட்டிற்கு அழைத்துக் கையளித்தார். அதே போன்றே, தமிழீழ விடுத லைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் வே.பிரபாகரன் அவர்களையும் தன்னிடம் வந்து பணத்தைப் பெற்றுச் செல்லுமாறு தகவல் அனுப்பிய பொழுது,அவரது அழைப்பைப் வே.பிரபாகரன் அவர்கள் நிராகரித்துவிட்டார்.... இது தி.மு.க. கட்சித் தொண்டர்களிடையே அதிர்ச்சியையும் கோபத்தையும் ஏற்படுத்தியது. அதேவேளை எம்.ஜீ.இராமச்சந்திரன் அவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் வளர்ச்சியில் நீண்டகாலமாகவே பொன்முட்டை இடும் வாத்தாகவே இருந்து வந்தமை எவருக் குமே தெரியாது. ஒரு தடவை தமிழகத்தில் விடு தலைப் புலிகளின் அலுவலகம் இருந்துவந்த பொழுது, அவர்களின் அவசர தேவைக்காக நிதி தேவைப்பட்டது. அப்பொழுது ஒரு வாகனத்தில் எம்ஜியாரின் இராமாவரம் தோட்டத்திற்கு சென்னையில் தங்கியிருந்த போராளிகள் சிலர் சென்றபொழுது அவரது வீட்டிற்குச் சென்று அவரைச் சந்தித்தார்கள். அப்பொழுது அவருடைய சகோதரர்,செயலாளர் ரகுபதி அஆகியோர் வீட்டின் முன் மண்டபத்தில் பேசிக் கொண்டிருந்தனர். அவர்களைக் கண்டதும் எம்ஜியார் அவர்கள் தலையை நிமிர்த்தி சிரித்துக் கொண்டே உள்ளே வருமாறு அழைத்தார். அவர்கள் அவர்முன் வந்ததைக் கண்டதுமே அவர்கள் வந்த நோக் கத்தை எம்ஜிஆர் புரிந்து கொண்டார். அவரது பார்வையைத் தொடர்ந்து, அங்கு வந்த போரா ளிகளில் ஒருவர், அண்ணை... எங்களுக்கு அவசரமாகக் கொஞ்சம் பணம் வேணும் என்று கேட்டதும் அவரும் தாமதிக்காது பெட்டி கொண்டு வந்தீங்களா...?..என்று கேட்டதுமே ஆமா அண்ணை வண்டியிலை இருக்குது.... என்று கூறியதும் தனது செயலாளருக்குக் கண்ணைக் காட்டியதும்,அவர்களை அழைத்துச்சென்று பெட்டி நிறைய இந்திய ரூபாய் நோட்டுக்களை அள்ளி நிரப்பிக் கொடுத்தார். இப்படிப்பட்ட ஒரு வள்ளலின் தன்னலமில்லாத கொடையைப் புறம் தள்ளிவிட்டு பிரசாரத்திற்காகவும் புகழுக்காகவும் ஐம்பதாயிரம் ரூபாவைக் கொடுப்பதாக ஊடகங்க ளின் ஊடாக வெளிப்படுத்திய கலைஞர் முத்து வேல் கருணாநிதியிடம் இருந்து தன்மானமுள்ள ஒரு போராளி வீடுதேடிச் சென்று பணத்தை வாங்குவாரா...?




தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்களின் அன்புக்குரிய ஒரு உன்னதமான தலை வராக இருந்த எம்.ஜி.இராமச்சந்திரன் அவர்க ளின் வீட்டிற்குச் சென்று பல தடவைகள் உரை யாடியிருக்கின்றார். அவருடைய பெருமளவு திரைப்படங்களைப் பிரபாகரன் அவர்கள் பார்த்து அவருடைய விசிறியாகவெ இருந்திருக்கின்றார்.

1950களில் இருந்து தமிழ் திரைப்பட உலகின் குறிகாட்டியாகவும், தமிழகத்தின் முதலமைச்சராகவும் இருந்து சாதாரண மக்களாலும் போற்றப்பட்டுவந்த எம்.ஜி.ஆர் என அழைக்கப்பட்ட எம்.ஜி.இராமச்சந்திரன் அவர்களின் 2017ஆம் ஆண்டில் இவரது 100ஆவது அகவை நாளை இந்திய இலங்கைத் தமிழர்கள் மட்டுமல்லாது, ஐரோப்பிய நாடுகளிலும் சிறப்பாக நினைவு கூரப்பட்டது. அதேவேளை அவரது புரட்சிகரமான சாதாரண மக்களையும் கவரும் வகையிலான வேடங்களை ஏற்று நடித்ததால்,இலங்கையில் சிங்கள மக்களாலுமே மதிக்கப்பட்டு வந்தார். ஒரு உன்னதமான நடிகரும், அரசியல் தலைவருமாகத் திகழ்ந்ததால், இலங்கையில் பல்வேறு இடங்களில் உருவச் சிலைகள் அமைக்கப்பட்டு அவரது நினைவு நாட்களில் நினைவு கூரப்பட்டு வருகின்றது.

அவரது உருவச் சிலைகள் பாசையூர், கல்வியங்காடு சந்தையடி, வல்வெட்டித்துறை ஆலடி போன்ற பல இடங்களில் பொது அமைப்புக்களால் அமைக்கப்பட்டு அவரது

தொடர்ச்சி 14ஆம் பக்கம்



# இலக்கு வைக்கப்படும் பெருந்தோட்டக் காணிகள்

துரைசாமி நடராஜா

பெருந்தோட்ட மக்களின் காணியுரிமை மற்றும் வீட்டுரிமை என்பன தொடர்பில் இன்னும் இழுபறியான நிலைமைகளே இருந்து வருகின்றன. இந்நிலைமையானது இம்மக்களின் சமூக அந்தஸ்தினை கேள்விக்குறியாக்கி வருவதோடு மேலும் பல பாதக விளைவுகள் ஏற்படுவதற்கும் அடித்தளமாகி வருகின்றது. எனவே இம்மக்களுக்கு காணியுரிமை மற்றும் வீட்டுரிமை என்பவற்றை பெற்றுக் கொடுத்து இம்மக்களை தேசிய நீரோட்டத்தில் சங்கமிக்கச் செய்து, ஒளிமயமான எதிர்காலத்தை உருவாக்கிக் கொடுக்க வேண்டியது அவசியமாகியுள்ளது. இதனிடையே பெருந்தோட்ட மக்களுக்கான காணியுரிமை மற்றும் வீட்டுரிமை குறித்து வரவு செலவு திட்டத்தில் விசேட வேலைத் திட்டம் கொண்டு வரப்பட்டுள்ளதாக தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் கலைச்செல்வி தெரிவித்துள்ளார். இதே வேளை கடந்த கால ஆட்சியாளர்கள் தேர்தல் விஞ்ஞாபனங்களிலும், வரவு செலவு திட்ட முன்மொழிவுகளிலும், மேடைப் பேச்சுக்களிலும் காணி மற்றும் வீட்டுரிமை குறித்து கவர்ச்சியான வாக்குறுதிகளை வழங்கி அவற்றை நிறைவேற்றத் தவறியுள்ளமை தெரிந்ததாகும். இந்நிலையில் ‘ஒரே குட்டையில் ஊறிய மட்டைகளாக” அல்லாது அதிலிருந்தும் மீண்டெழுந்து தேசிய மக்கள் சக்தி இவ்விடயம் குறித்து காத்திரமான முன்னெடுப்புக்களை மேற்கொள்ள வேண்டும் என்ற எதிர்பார்ப்பு மேலோங்கி காணப்படுகின்றது.

காணியுரிமை என்பது தனிமனிதன், குடும்பம், சமூகம் என்று எல்லா மட்டத்திலும் இன்றியமையாத தேவையாக காணப்படுகின்றது. இவ்வுரிமையானது வீட்டுரிமையை பெற்றுக் கொள்ள உந்துசக்தியாக அமையும் என்று கருதப்படுகின்றது. உலகில் பல சமூகத்தினர் காணியுரிமையை சாத்தியப்படுத்திக் கொள்ளும் நோக்கில் பல்வேறு போராட்டங்களிலும் ஈடுபட்டு வந்துள்ளமையையும் வரலாறுகள் உணர்த்துகின்றன. காணியுரிமையை பெற்றுக் கொண்ட சமூகங்களின் வாழ்க்கைப் பாதை முன்னேற்றகரமான போக்குகளை கொண்டு விளங்குகின்றது. சமூக நிலைமைகள் மேம்பட்டு விளங்குவதோடு அபிவிருத்திப் பாதையில் ஒரு சமூகம் தன்னை இணைத்துக் கொள்வதற்கும் காணியுரிமை பல சந்தர்ப்பங்களில் அடித்தளமாக இருந்துள்ளது என்பதையும் மறுப்பதற்கில்லை.

### பொறுப்புள்ள பிரஜைகள்

இந்த வகையில் மலையக மக்களின் காணியுரிமை குறித்து நாம் நோக்குகின்றபோது அது வருந்தத்தக்க ஒரு விடயமாகவே காணப்படுகின்றது. இலங்கையில் 1930 ம் ஆண்டு முதலாகவே காணியற்ற விவசாயிகளுக்கு காணியை பெற்றுக் கொடுக்கும் தேசிய விவசாயக் கொள்கை செயற்பட்டு வருகின்றது. இதன் முக்கிய நோக்கங்களில் ஒன்று நாட்டின் உணவுத் தேவையில் தன்னிறைவு காண்பதாகும். இரண்டாவது குடியடர்த்தி கூடிய பகுதிகளில் உள்ள மக்களை, அடர்த்தி குறைந்த வரண்ட வலயப் பகுதிகளில் மீளக் குடியமர்த்துவதாகும். மூன்றாவது காணியற்ற விவசாயிகளுக்கு காணியைப் பெற்றுக் கொடுத்து அவர்களை காணி உரிமையாளர்களாக்கி, சமூக அந்தஸ்து, தன்னம்பிக்கை என்பவற்றை அவர்கள் மத்தியில் ஏற்படச் செய்து, அதன் மூலம் அவர்களை பொறுப்புள்ள பிரஜைகளாக நாட்டின் அபிவிருத்தியில் பங்கேற்கச் செய்வதாகும். எனினும் இத்தகைய உயர்ந்ததும், பரந்ததுமான நோக்கங்களின் நன்மைகள் மலையக தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் சென்றடையவில்லை என்பதனை புத்திஜீவிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.



காணி வழங்கும் கொள்கையின் ஆரம்ப காலப் பகுதிகளில், பெருந்தோட்டங்களுக்கு தொழிலாளர்களைதாராளமாகவழங்கவேண்டும் என்பதற்காக குடியேற்ற அரசும் அதில் ஆர்வம் செலுத்தாதிருந்தது. நாடு சுதந்திரம் பெற்றதும் ஏற்பட்ட குடியுரிமை நீக்கச் சட்டம் காரணமாக, காணியுரிமை நாடற்றவர்களுக்கு வழங்கப்பட மாட்டாது, என்ற ரீதியிலும் இம்மக்களுக்கு காணி பெற்றுக் கொடுக்கப்படவில்லை. இதன் தொடர்ச்சியினை நாம் இன்றும் அவதானிக்க கூடியதாக உள்ளது.

1930ம் ஆண்டு தொடக்கம் 1987ம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் அரசாங்கம், காணியற்ற விவசாயிகளுக்கு காணி வழங்குவதனை முக்கிய விவசாய அபிவிருத்தித் நடவடிக்கையாக முன்னெடுத்து வந்தது. இதனடிப்படையில் 105 ஆற்று வடிநில அபிவிருத் தித் திட்டங்களை அரசாங்கம் அமுல்படுத்தியுள்ளதோடு, அவற்றின் மூலம் சுமார் இரண்டரை இலட்சம் ஏக்கர் நிலத்தை ஒரு இலட்சம் குடும்பங்களிடையே பகிர்ந்தளித்துள்ளது. 1980 தசாப்தத்தில் மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் சுமார் 55,000 குடும்பங்களுக்கு ஒரு இலட்சத்து 65,000 ஏக்கர்களை அரசாங்கம் பகிர்ந்தளித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும். எனினும் மலையக மக்களுக்கு எந்த ஒரு திட்டத்தின் கீழும் எவ்விதமான காணியும் பெற்றுக் கொடுக்கப்படவில்லை என்பது வருந்தத்தக்க ஒரு விடயமாகும். இலங்கையைப் பொறுத்தவரையில் காணியுரிமையில் அடிக்கடி பெருந்தோட்டக் காணிகளிலேயே மாற்றங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன. 1972 வரை பிரித்தானிய கம்பனிகளுக்கு சொந்தமான காணிகள் பின்னர் தேசிய மயமாக்கப்பட்டன. அரசுடைமையாக்கப்பட்ட காணிகளில் பெரும்பாலானவை வெவ்வேறு நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டன. மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை, இலங்கை அரசாங்க பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் ஆகிய நிறுவனங்கள் இக்காணிகளை நிர்வகித்தன. எனினும் 1990 ம் ஆண்டின் பின்னர் பெருந்தோட்டக் காணிகள் மீண்டும் தனியாரிடம் ஒப்படைக்கப்பட்டது.

### டீ.எஸ்.சேனநாயக்காவின் சதி

அரசாங்கம் காணிச் சுவீகரிப்பு குறித்து சிந்திக்கும் போதெல்லாம் பெருந்தோட்டக் காணிகளே இலக்கு வைக்கப்பட்டு வருவதும் தெரிந்த விடயமாகும். அபிவிருத்தி என்னும் போர்வையில் பெருமளவான பெருந்தோட்டக் காணிகள் கடந்த காலங்களில் சுவீகரிக்கப்பட்டுள்ளன. இதனால் தொழிலாளர்களின்

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

நேர்காணல்



# மன்மோகன் சிங் காலத்தில் பெரும் பேரழிவைச் சந்தித்த ஈழத்தமிழர்கள்

## அரசியல் பேராசிரியர் இராமு.மணிவண்ணன்



**கடந்த மாதம் 26ம்திகதி இந்தியாவின் முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங் அவரது 92ஆவது வயதில் காலமாகியுள்ளார். காங்கிரஸ் கட்சி 2004 தேர்தலில் வெற்றி பெற்ற பின், கட்சித் தலைவர் சோனியா காந்தி பிரதமர் பொறுப்பேற்க மறுத்தபோது மன்மோகன் சிங் பிரதமராகத் தேர்வு செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.**

**இந்த நிலையில், முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங், காலத்தில் ஈழத்தமிழர் விடயத்தில் அவரின் நிலைப்பாடு குறித்து இலக்கு ஊடகத்திற்க்கு அரசியல் பேராசிரியர் இராமு.மணிவண்ணன் அவர்கள் வழங்கிய கருத்து**

**மறைந்த முன்னாள் இந்திய பிரதமர் மன்மோகன் சிங்கின் ஆட்சிக்காலம் ஈழத்தமிழர்களுக்கு மிகப்பெரும் அழிவை தந்தது தொடர்பில் தமிழக மக்களின் பார்வை எவ்வாறு உள்ளது?**

முன்னாள் இந்தியப்பிரதமர் மன்மோகன் சிங் அவர்களுடைய மறைவுக்கு எனது ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கின்றேன். ஈழத் தமிழர்களைப் பொறுத்தமட்டில் அரசியல் பின்ன டைவு என்பதைவிட பெரும் உயிரிழப்பு மற்றும் பெரும் இனப்படுகொலையைச் சந்தித்த ஒரு காலமாகும் அவருடைய ஆட்சிக்காலம். மேலும் அவருடைய ஆட்சிக்காலம் வருந்தத்தக்க ஒரு அரசியல் காலச் சுவடாகும்.

அத்தோடு தமிழக மக்கள் அவருடைய ஆட்சிக்காலத்தை எவ்வாறு பாக்கின்றார்கள் என்பதையும் முக்கிய மாக பார்க்க வேண்டும்.



மன்மோகன் சிங்கைப்பொறுத்தமட்டில் அவர் ஒரு நல்ல மனிதராகப்பார்க்கப்பட்டதும் அந்தளவிற்கு ஒரு ராஜதந்திர தலைவராக பார்க் கப்பட்டதும் பேசப்பட்டதும் கிடையாது. இதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

ஆகவே மன்மோகன் சிங்குக்குப் பின்னால் யாரோ இருந்து இயக்கிய சக்திகளை மக்கள் கண்டு கொண்டார்கள். ஆதலால்தான் இவர் ஒரு கைப்பாவையாகத்தான் இயங்கினார் என்பது ஈழத்தமிழ் அரசியலிலும் கூட நாம் பதிவு செய்ய வேண்டும்.

அவர் ஆட்சிக் காலம் ஒரு பேரிழப்புக்கு உட்படுத்தப்பட்ட காலமாக இருந்தாலும் கூட அவர் ஒரு கைபொம்மையாக வேறொரு சக்திகளுக்கு இயக்கப்பட்டார் என்பதற்கு மாற்றுக்கருத்துக் கிடையாது. இந்திய அரசியலாக இருந்தாலும் சரி, தமிழக மக்கள் ஈழத்தில் நடந்தவற்றைக் குறித்துப் பேசும் போது கூட தனிமைப்படுத்தி, விமர்சனங்கள் வைக்கப்படவில்லை. ஆனால் அவருக்கு பின் இருந்து இயங்கியவர்கள் குறித்து இன்றைக்கும் விமர்சனங்கள் தங்கியுள்ளன.



**ஈழத்தமிழர்கள் மீதான இன அழிப்பில் மன்மோகன் சிங்கின் பங்களிப்பு உள்ளது என்பதை இந்திய மக்கள் ஏற்றுக் கொள்கிறார்களா?**



மன்மோகன் சிங் அவர்கள் அன்று ஒரு பிரதமராக இருந்தமையால் அதற்கான ஒரு பொறுப்பு என்பது நிச்சயமாக இருக்கின்றது. மறுப்பு சொல்வதற்கு இல்லை. அதேபோல் நான் முன்னர் கூறிய பதிலில் இருந்து சில பகுதிகளைக் குறிப்பிட விரும்புகின்றேன். ஈழத்தமிழர் பேரிழப்புக்கும் அதேபோல் இந்திய அரசாங்கம் காத்த மௌனத்திற்க்கும் பெரும் விலையை ஈழத்தமிழர்கள் கொடுக்கவேண்டியதாயிற்று. எனவே அந்தக் கால கட்டத்தில் தமிழ் பேசும் மக்கள் என்று கூட இந்திய அரசாங்கம் கண்டுகொள்ளாமல் இருந்தமைக்கு மன்மோகன் சிங் மட்டுமே அல்லாமல், அவருக்கு பின்னால் இயங்கிய சக்திகளும் ஒரு காரணமாக அமைந்தன. அதனால் நான் அவரைக் குறித்து விமர்சனங்கள் வைக்கும் போது, பிரதமராக இருந்தாலும் அரசாங்கத்தின் தலைமை அமைச்சராக இருந்தாலும் கூட, இவற்றையெல்லாம் கடந்து

தொடர்ச்சி 16ஆம் பக்கம்

# இனக் கொலைக் குற்றவாளிக்கு இனிய வரவேற்பு:

## ஈழத் தமிழர் முதுகில் குத்தும்

# இந்திய வல்லரசு!

'மாவீரர்நாள் உரை' நிகழ்த்த அரிதாரம் பூசி வந்த பொய்த் துவாரகைக்குக் கட்டியம் பாடிய காசி ஆனந்தனார் பேசிய வசனத்தை மறந்திருக்க மாட்டீர்கள்: "இந்திய அரசின் துணையோடு துவாரகை அரசியலில் களமாடப் போகிறார்."

'துவாரகை' நாடகத்தில் விரைவாகவே திரை விழுந்து விட்டதால் சூத்திரதாரிகள் இப்போது பிரகடனக் காய்களை உருட்டத் தொடங்கியுள்ளார்கள். முதலாவதாக 'நான்கு தூண்கொள்கைப் புகழ் ஜிடிஎஃப் சுரேன் சுரேந்திரனின் கதையாடலில் இமய மலையிலிருந்து உருட்டப்பட்டுள்ள இமாலயப் பிரகடனம்! இதை அறியாத்தனமாக யாராவது ஆதரித்து விட்டால் அவர்கள் அந்த இமாலயத் தவற்றுக்காக வருந்துவதற்குப் பொருத்தமான பெயர்தான்!




அடுத்து இந்திய இந்துத்துவ ஆளும் கும்பலின் ஆசியோடு சென்னையிலிருந்து உருளப் போவது 'தமிழ்நாட்டு மக்களின் கூட்டுப் பிரகடனம்.' இரண்டகர்களுக்கு இனிய முகம், இது முதிய முகம் என்று இரவல் கொடுத்திருப்பவர் பழ. நெடுமாறன். அவர் தலைமையில்தான் கூட்டுப் பிரகடனத்துக்கு மாநாடு கூட்டப் போகிறார்கள். 'ஐயா' இந்த வயதில் இந்த அளவுக்குத் தாழ்ந்து போவார் என்று நம்புவது உலகத் தமிழர்களுக்குக் கடினமாகத்தான் உள்ளது.

காசி ஆனந்தனும் பழ. நெடுமாறனும் தமிழீழத்துக்காக எந்தக் காய் நகர்த்துவதாக இருந்தாலும் அதற்கு முன் உலகத்தமிழர்களிடம் 'துவாரகை' மோசடிக்கு வெளிப்படையாக மன்னிப்புக் கேட்க வேண்டும். பிரகடனம், பிலாக்கனம் எல்லாம் பிறகுதான்!



இராசபட்சேக்கள் நடத்திய இனவழிப்புக்கு முழுக்க முழுக்க உடந்தையாக இருந்த இந்திய அரசு, பன்னாட்டு அரங்கிலும் இனவழிப்புக் குற்றவாளிகளை சூழ்ச்சித் திறத்தோடு இன்றளவும் பாதுகாத்து வரும் இந்திய அரசு.. இப்போதும் இனக் கொலைக் குற்றவாளிகளுக்கு 'யாமிருக்க பயமேன்?' என்று சேதி சொல்லியிருக்கிறது. அதற்கு இந்திய சாணக்கியம் கண்ட வழிதான் இராணுவத் தளபதி சவேந்திர சில்வாவுக்கு படாடோபமான வரவேற்பு!



**தியாகு**
பொதுச்செயலாளர்,
தமிழ்த்தேசிய விடுதலை இயக்கம்

தமிழினவழிப்புப் போரில் கோழைத்தனமாக அப்பாவிப் பொதுமக்களைக் கொன்று குவித்த சிங்களப் படைப் பிரிவுகளின் முதன்மைத் தளபதிகள் ஐந்தாறு பேரில் ஒருவர்தான் சவேந்திர சில்வா. இவர் தலைமையிலான படைப் பிரிவுகள் இழைத்த போர்க் குற்றங்கள் ஐநா அறிக்கைகளில் பதிவாகியுள்ளன. அவரே இந்தக் குற்றங்களைத் தன் வீரச் செயல்களாகப் பீற்றிக் கொள்ளவும் தயங்கவில்லை.



சவேந்திர சில்வாவின் போர்க் குற்றங்கள் சிங்களத்தின் தமிழினவழிப்புப் பெருங்குற்றத்தில் முக்கியக் கூறுகளாகும். யுகோஸ்லாவிய இனக் கொலைகளில் ஸ்லோபடான் மிலோசெவிக்கின் தளபதிகள் பன்னாட்டு நீதிமன்றத்தில் தண்டிக்கப்பட்டது போல் தண்டிக்கப்பட வேண்டிய ஒருவர்தான் சவேந்திர சில்வாவும்.

சவேந்திர சில்வாவின் கொலைப் 'புகழ்' உலகெங்கும் பரவிக் கிடக்கிற ஒன்று. செவ்விந்தியர்களை இனவழிப்புச் செய்து நிறுவப்பெற்றதும், உலகெங்கும் பற்பல இன வழிப்புகளை முன்னின்று நடத்தியதும், இன்றளவும் இசுரேலின் நெட்டன்யாகு வரை எத்தனையோ இனக்கொலைக் குற்றவாளிகளுக்கு ஆபத்பாந்தவனுமாகிய அமெரிக்காவே சவேந்திர சில்வாவின் போர்க் குற்றங்களைக் கேட்டு 'அதிர்ச்சியுற்று' அவர் அமெரிக்காவில் நுழையத் தடை விதித்தது என்றால் பார்த்துக் கொள்ளுங்கள்.

மனிதவுரிமைகளுக்கான ஐநா உயராணையர் சிறிலங்காவின் போர்க் குற்றவாளிகளுக்குப் பன்னாட்டு அரசுகள் பயணத்தடை விதிக்கப் பரிந்துரைத்தார். சிங்கள அரசோ இந்தக் குற்றவாளிகளை ஐநாவிற்கும் பன்னாட்டு அரசுக்கும் தூதுவர்களாக அனுப்பி அவர்களுக்கு அரசதந்திரச் சட்டக் காப்பு வழங்கியது. சவேந்திரா கையில் தமிழர்களின் குருதிக் கறையோடு ஐநாவுக்குச் சென்றதும், ஐநா அமைதிக் காப்புப் படைகளில் பொறுப்பேற்றதும் எவ்வளவு பெரிய கொடுமை!

இலங்கையில் ஈழத் தமிழர்களுக்கு எதிராக சிங்கள அரசு நடத்திய போருக்கு இந்தியா வழங்கிய ஆதரவுக்கும் வழிகாட்டலுக்குமான காரணங்களை ஆய்வு செய்த நோர்வே நாட்டு ஆராய்ச்சி நிறுவனம்



ஒன்று சுட்டிக்காட்டிய செய்தி: இந்திய அரசு இந்திய மண்ணில் பொதுமக்களுக்கு – குறிப்பாகப் பழங்குடி மக்களுக்கு - எதிராகப் 'பச்சை வேட்டை' போன்ற உள்நாட்டுப் போர் நடவடிக்கைகளை நிகழ்த்த இலங்கையில் வைத்து ஒத்திகை பார்க்க விரும்புகிறது என்பதாகும். இப்படிப் பார்க்கும் போது, இந்திய *IARAANUVATH* இராணுவப் பயிற்சிக் கழகத்தில் பயில்படையினரின் பயிற்சி நிறைவு விழாவுக்கு முதன்மை விருந்தினராக சவேந்திர சில்வா அழைக்கப்பட்டது பொருத்தம் என்றுதான் சொல்ல வேண்டும்.

பயிற்சி நிறைவு செய்த ஒவ்வொருவர் கையிலும் வாள் கொடுத்தாராம் சவேந்திரர்! கொலைகாரன் கொடுத்த கொலைவாள் இந்தப் பயில் படையினருக்கு என்ன கற்றுத்தரும்? ஒன்றே ஒன்றுதான்: 'அப்பாவிப் பொதுமக்களை வதைக்கவும் அழிக்கவும் தயங்காதீர்! என்னைத் தேடி வந்த விருதுகளும் பரிசுகளும் மரியாதைகளும் உங்களையும் தேடிவரும்!'

இந்தியாவைத்தான் நம்பியிருக்கிறோம் என்று நாளும் புலம்பிக் கொண்டிருக்கும் ஈழத் தமிழ் பேர் அறிஞர்கள் இனி மோதிக்கும் அமித்சாவுக்கும் முதுகு சொரிந்தால் போதாது, சவேந்திர சில்வா போன்ற தளபதிகளுக்கும் 'போற்றி போற்றி' பாட வேண்டியதுதான்!

தமிழர்கள் இந்த இனக்கொலைக் குற்றவாளிகள் ஒவ்வொருவரையும் கூண்டிலேற்றுவதில் உறுதியாக இருக்க வேண்டும். ஒவ்வொரு குற்றவாளியின் பெயரையும், முகத்தையும், அவர் செய்த கொடுஞ்செயல்களையும் நினைவில் வைத்துக் கொள்வதோடு உலகெங்கும் பரப்பவும் வேண்டும். எந்த நாடும் இந்தக் கொலைகாரர்களை வரவேற்று மதிப்பளிப்பது கிடக்கட்டும், நுழையவே அனுமதிக்கக் கூடாது என்ற நிலையை


தொடர்ச்சி 16ஆம் பக்கம்

# இன்றைய அமெரிக்காவின் கொள்கைகளுக்கு பலமாக நின்றவர் காட்டர்



வேல்ஸில் இருந்து **அருஸ்**

அமெரிக்காவின் 39 ஆவது அரச தலைவராக 1977 ஆம் ஆண்டு பதவியேற்ற ஜிம்மி காட்டர் கடந்த ஞாயிற்றுக்கிழமை (29) தனது 100 ஆவது வயதில் காலமானார். 1981 ஆம் ஆண்டு அரச தலைவர் பதவியை துறந்த அவர் 44 வருடங்கள் வாழ்ந்த பின்னர் மரணமடைந்துள்ளார்.




நிலக்கடலைவிவசாயத்தில்ஈடுபட்டகுடும்பத்தில் பிறந்த காட்டர் அமெரிக்காவின் கடற்படை கல்லூரியில் 1946 ஆம் ஆண்டு பட்டம்பெற்று 1946 ஆம் ஆண்டில் இருந்து 1953 ஆம் ஆண்டு வரையில் கடற்படையில் பணியாற்றியிருந்தார். அதன் பின்னர், தனது தந்தையின் தொழிலை 1953 ஆம் ஆண்டு பெறுப்பெடுத்த அவர் அரசியலுக்கு வரும் வரையிலும் அதனையும் நிர்வகித்தே வந்தார். அதேசமயம் படையினரின் பின்னிருக்கை படையில் 1953 ஆம் ஆண்டில் இருந்து 1961 ஆம் ஆண்டு வரையில் பணியும் ஆற்றியிருந்தார்.

அமெரிக்க அதிபராக ஜேரால்ட் போர்ட்டை தோற்கடித்து 1976 ஆம் ஆண்டு பதவியை கைப்பற்றிய காட்டர் ஆப்கானிஸ்தானில் சோவியத்து படையினருக்கு எதிராக முஜாகுதீன் ஆயுதப்படையினருக்கு ஆதராவாக அமெரிக்காவை களமிறக்கும் வியூகத்தை வகுத்ததில் முக்கியமானவர்.

இஸ்லாமிய படையினருக்கு ஆயுதங்களை கொடுத்து, பயிற்சிகளை வழங்கி சோவியத்துக்கு ஆதரவான அரசுக்கு எதிராக போராடும் போராளிக்குழுக்களை உருவாக்கியதில் அவரின் பங்கு முக்கியமானது. அதாவது 1978 ஆம் ஆண்டு முஜாகுதீன் என்ற அமைப்பை உருவாக்கி வெற்றிகரமாக வழிநடத்தியிருந்தது அமெரிக்கா. பின்னர் இந்த அமைப்பே அல்கைடா மற்றும் தலிபான்களாக உருவெடுத்திருந்ததுடன், அது தற்போது ஐ.எஸ்.ஐ.எஸ் என்ற அமைப்பாகவும் அமெரிக்காவின் உதவியுடன் பரிணமித்துள்ளது.

முஸ்லீம் ஆயுதக்குழுக்களின் உதவியுடன் சோவியத்தின் வளர்ச்சியை பனிப்போர் காலத்தில் முடக்குவதே அமெரிக்காவின் வியூகமாக இருந்தது. மொஸ்கோவின் படை நடைவடிக்கையை செலவுமிக்கதாக மாற்றுவதன் மூலம் சோவியத்திற்கு அதிக பொருளாதார மற்றும் படைத்துறை இழப்புக்களை ஏற்படுத்துவது காட்டர் வகுத்த உத்தி.




அவரின் இந்த உத்திகளை தான் அமெரிக்கா தலைமையிலான மேற்குலக நாடுகள் பல தசாப்தங்களாக பயன்படுத்தி வருகின்றன. மொஸ்கோவிற்கு ஆதரவான நாடுகள் பல முஸ்லீம் ஆயதக்குழுக்கள் மூலம் வீழ்த்தப்பட்டன. 1990களில் மொஸ்கோவின் நட்புநாடான யூகோஸ்லாவியாவும் இந்த வியூகத்தின் ஊடாக தான் வீழ்த்தப்பட்டது. பின்னர் ஈராக், லிபியா, அந்த வரிசையில் தற்போது சிரியா.

1979 ஆம் ஆண்டு இஸ்ரேலுக்கும் எகிப்திற்கும் இடையில் ஏற்படுத்தப்பட்ட காம் டேவிட் உடன்பாடு 31 வருடகால போரை முடிவுக்கு கொண்டுவந்ததுடன், மறைமுகமாக முஸ்லீம் மக்களை பிரிந்தாண்டு இஸ்ரேலுக்கு பலம் சேர்த்தது. எனினும் அதே வருடம் ஈரானின் தலைநகர் தெகிரானில் இடம்பெற்ற அமெரிக்க தூதரகம் மீதான முற்றுகையை முறியடித்து அதிகாரிகளை மீட்க முடியாது போனது காட்டரின் அரசியல் தோல்வியாகவே பார்க்கின்றனர். புதிய அமெரிக்க அதிபராக றோனால்ட் றேகன் பதவியேற்றபோதே 1981 ஆம் ஆண்டு கைதிகள் விடுவிக்கப்பட்டனர்.



ஈரானுக்கு எதிராக அமெரிக்காவின் போர் முனைப்புக்கள் அதிகரித்ததும் காட்டரின் காலப்பகுதியில் தான். 1979 ஆம் ஆண்டு ஈரானின் பலவி டைனஸ்ரி பதவியில் இருந்து தூக்கியெறியப்பட்டார். இஸ்லாமிய குடியரசு உருவாகியது. அதனைத் தொடர்ந்து ஈராக்கின் அதிபர் சதாம் குசைனுடன் வெள்ளைமாளிகை தொடர்புகளை வலுப்படுத்தியது. 1980 களில் ஈரான் மீது ஈராக் ஒரு ஆக்கிரமிப்பை செய்தது.

தற்போதும்அமெரிக்காவுக்கும்ஈரானுக்கும் இடையிலான உறவுகள் சீர்குலைந்தே உள்ளதுடன், 2024 ஆம் ஆண்டு இரு நாடுகளுக்கும் இடையிலான மோதல்கள் இஸ்ரேலை மையமாக வைத்து உக்கிரமும் அடைந்திருந்தன. பனிப்போர் காலத்து எதிரியை முறியடிப்பதற்கு முதன்மை வழங்கிய காட்டரின் வெளிவிவகாரக் கொள்கைகள் அரசியல்



இராஜதந்திர எல்லைகளுடன் நின்றுவிடவில்லை. மாறாக படைத்துறை ரீதியில் அமெரிக்க படையினரை உலகில் முதல்தர நிலைக்கு தரமுயர்த்தும் திட்டங்களும் காட்டரின் காலத்தில் தான் வகுக்கப்பட்டிருந்தன. உலகில் முதல் முதலாக ரடார்களின் திரைகளில் கண்டறியப்படாத ஸ்ரெல்த் குண்டுவீச்சு விமானங்களை உருவாக்கும் திட்டம் உருவாக்கப்பட்டது. 1980 ஆம் ஆண்டு இந்த விமானங்கள் தொடர்பான தகவல்களை அமெரிக்காவின் அன்றைய பாதுகாப்புச் செயலாளர்

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

## தமிழ்த்தேசியம் ... தொடர்ச்சி ...

9. கி.துரைராஜசிங்கம், மட்டக்களப்பு.
10. கி.சேயோன், மட்டக்களப்பு.
11. ரஞ்சினி கனகராசா, மட்டக்களப்பு

ஆகியோர்.

இந்த 11, பேரில் 07, பேர் வேட்பாளராக தேர்தலில் போட்டியிட்டனர் (சத்திய லிங்கம்,சுமந்திரன்,சிறி தரன், சாணக்கியன், கலையரசன், குகதாசன், சேயோன்)

இந்த தேர்தல் நியமனக்குழு கூட்டம். 05,06.10.2024 ஆகிய இரண்டுதினங்கள் வவுனியாவிலும், திருகோணமலையிலும் கூடி ஐந்து மாவட்டங்களுக்குமான வேட்பாளர்களை அறிவித்தனர்.

இந்த நியமனக்குழுவால் தெரிவான பல வேட்பாளர்களில் கடந்த ஜனாதிபதி தேர்தலில் தமிழ் பொதுவேட்பாளரை ஆதரித்தவர்களையும் அதே நியமனக்குழுவே தெரிவு செய்தது அதில் முக்கியமான நால்வர் இப்போது பாராளுமன்ற உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டனர்.

1, சிவஞானம் சிறிதரன்- யாழ்ப்பாணம்.
2,ஞானமுத்து ஸ்ரீநேசன்-மட்டக்களப்பு.
3, சதாசிவம் குகதாசன்-திருகோணமலை.
4,கவிந்திரன் கோடீஷ்வரன்-அம்பாறை.

வேட்பு மனுதாக்கல் 04.10,2024 இடம்பெற்றது. வேட்பு மனுவில் கையொப்பம் இட்டவர் பதில் பொதுச்செயலாளராக உள்ள ப. சத்தியலிங்கம். இந்த பொதுத்தேர்தலின்போது தலைவராக இருந்த மாவை சேனாதிராசாவும் நியமனக்குழுவின் தலைவராகவும் இருந்தார். அவரும் ஜனாதிபதி தேர்தலில் தமிழ் பொது வேட்பாளரை ஆதரித்து கிளிநொச்சி மேடையில் உரையாற்றியதுடன் யாழ்ப்பாணத்திலும் சில கலந்துரையாடல்களை நடத்தினார்.

ஆனால் ஜனாதிபதி தேர்தல் தினத்தில் இரகசிய வாக்கெடுப்பை நடத்திவிட்டு உடனே ஊடகத்தில் மூன்று சின்னங்களுக்கு தாம் புள்ளடி இட்டதாக ஒரு கோமாளிக்கூத்தை அரங்கேற்றினார்.

பொதுத்தேர்தல் 14.11.2024,ல் இடம்பெற்றது 159, ஆசனங்களுடன் மிகப்பெரிய வெற்றியை தேசிய மக்கள் சக்தி பெற்றது. மிகப்பெரிய தோல்வியை தமிழ்த்தேசிய கட்சிகள் வடக்கில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் சந்தித்தது.

அதற்கான மூல காரணமாக இலங்கை தமிழ் அரசுக்கட்சியில் உள்ள சுமந்திரன் குழு மீது கொண்ட அதிருப்தியும், தமிழ்த்தேசிய கட்சிகள் மீது கொண்ட வெறுப்பும் என்பதே உண்மை என அரசியல் ஆய்வாளர்களுடைய கருத்துக்களில் இருந்து அறியலாம்.

தேர்தல் 14/11/2024இல் முடிந்தபின்னர் ஏறக்குறைய 45,நாட்களுக்கு பின்னர், ஜனாதிபதி தேர்தல் 21/09/2024இல் இடம்பெற்று சரியாக 3, மாதமும்,7 நாட்களும் (97,நாட்கள்) கடந்த நிலையில் தான் இறுதியான 28/12/2024, மத்தியகுழுக்கூட்டத்தில் தலைவர் மாவை சேனாதிராசாவின் தலைவர் பதவியை பறித்து சி.வி.கே.சிவஞானத்துக்கு வழங்கப்பட்டு மாவை சேனாதிராசா அந்த கூட்டத்தில் கலந்து கொள்ளாத நிலையில் அவரை திருப்திப்படுத்துவதற்காக அரசியல் குழு தலைவராக நியமிக்கப்பட்டது.

அதனோடு மத்தியகுழுவில் இருந்து ஜனாதிபதி தேர்தலில் தமிழ்பொது வேட்பாளரை ஆதரித்தவர்களுக்கு எதிராக விளக்கம் கோருவது என்ற தீர்மானமும், பொதுத் தேர்தலில் ஊடக அறிக்கை கட்சிக்கு மாறாக செயல்பட்டார் என்ற காரணத்தையும், அன்றைய மத்தியகுழுக்கூட்டத்தில் ஊடக சந்திப்பை கட்சிக்கு மாறாக தெரிவித்தமையால் முல்லைத் தீவை சேர்ந்த சிவமோகன் என்பவரை கட்சியில் இருந்து இடை நிறுத்தும் தீர்மானம் மேற்கொள்ளப்படுகிறது.

இதேவேளை தமிழ் பொது வேட்பாளராக ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்ட பா.அரிய நேத்திரனை விலக்கலாம் என தீர்மானம் எடுத்ததாகவும் ஊடகங்களில் செய்திகளை காணமுடிந்தது. இதுவரைபதில்பொதுச்செயலாளர் உத்தியோகபூர்வமாக அவருக்கு எழுத்து மூலமாக கடிதம் அனுப்பவில்லை. அந்த கடிதம் கிடைத்தபின்னரே அடுத்த நிலைப்பாடுகளை அறியலாம்.

இப்போது பலராலும் எழுப்பபடும் கேள்வி பாராளுமன்ற உறுப்பினராக தெரிவான சிறிதரன், ஸ்ரீநேசன், குகதாசன், கோடீஷ்வரன் ஆகியோர் ஜனாதிபதி தேர்தலில் தமிழ் பொதுவேட்பாளரை ஆதரித்தமையால் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவேண்டும் என சிலர் சமூக ஊடகங்களில் பதிவிடுகின்றனர்.

அப்படியானால் ஜனாதிபதி தேர்தலில் தமிழ்பொதுவேட்பாளரை ஆதரித்த இவர்களை பொதுதேர்தலில் வேட்பாளாராக நியமித்த நியமனக்குழுவும், மத்தியகுழுவும் இவர்களை வேட்பாளராக எந்த அடிப்படையில் தெரிவு செய்தனர். அதோடு தேர்தல் நியமனக்குழுவிலும் தமிழ் பொதுவேட்பாளரை ஆதரித்த சிறிதரன், குகதாசன் ஆகிய இருவரையும் ஏன் சேர்த்தனர் கட்சிக்கு முரணானவர்கள் என்று தெரிந்தும் அவர்களை வேட்பாளராக நியமிக்கும்வரை இவர்கள் ஜனாதிபதி தேர்தலில் தமிழ் பொது வேட்பாளரைஆதரித்தவிடயம்தெரியவில்லையா?



அதனோடு பொதுத்தேர்தலுக்கு பின்னர் தேசிய பட்டியல் நியமனத்தை யாருக்கு வழங்கலாம் என ஆராயும் அரசியல் குழுவில் தமிழ் பொதுவேட்பாளரை ஆதரித்த சிறிதரன், குகதாசன் இருவரும் சேர்ந்து அல்லவா பதில் பொதுச் செயலாளர் வவுனியா மாவட்ட தமிழரசு கட்சி தலைவர் 4033, வாக்குகளை மட்டும் பெற்ற சத்தியலிங்கத்துக்கு தேசிய பட்டியல் நியமன பாராளுமன்ற உறுப்பினர்களாக நியமித்துள்ளனர். அப்படி இருக்கும்போது கட்சியின் முடிவை காலம்தாழ்த்தி எடுத்து இப்போது மூன்று மாதங்களுக்கு முன்னர் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொதுவேட்பாளருக்கு ஆதரவு தெரிவித்த தமிழரசுக்கட்சி உறுப்பினர்கள் மீது ஆனால் அவர்கள் கடந்த பொதுத்தேர்தலில் தமிழரசுக்கட்சிக்கே பகிரங்கமாக ஆதரவு வழங்கினர். தமிழ் பொதுவேட்பாளராக போட்டியிட்ட பா.அரியநேத்திரனும் வெளிப்படையாக பொதுத்தேர்தலில் தமிழரசுக்கட்சிக்கே பிரசாரம் செய்தார் அதன்வேட்பாளர் ஞா.ஸ்ரீநேசனுக்கு ஆதரவாக செயல்பட்டார். இதுபோன்றே ஜனாதிபதி தேர்தலில் தமிழ் பொது வேட்பாளருக்கு ஆதரவு தெரிவித்த தமிழரசுக்கட்சி உறுப்பினர்கள் வடகிழக்கில் உள்ள நூற்றுக்கணக்கானவர்கள் பொதுத்தேர்தலில் தமிழரசுகட்சி வேட்பாளர் களையே ஆதரித்தனர்.

இதில் உண்மை தன்மை என்ன வெனில் மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழரசுக்கட்சி வேட்பாளரான ஞா.ஸ்ரீநேசனை ஆதரித்த மட்டக் களப்பு மாவட்ட தமிழரசுக் கட்சி உறுப்பினர் களுக்கு மட்டும் 20, பேருக்கு விளக்கம் கேட்டு பதில் பொதுச்செயலாளர் கடிதங்களை அனுப்பி இருப்பது உண்மையில் தனி நபர்களை திருப்திப் படுத்தும் முடிவாகவே கருதவேண்டி உள்ளது.

ஸ்ரீலங்கா முஷ்லிம் காங்கிரஷ் கட்சிமூலம் கடந்த 2020இல் பாராளுமன்ற உறுப்பினராகிய ஏறாவூர் நஷீர் அகமட் பாராளுமன்றத்தில் கட்சியின் தீர்மானத்தை மீறி அரசாங்கத்துக்கு ஆதரவு தெரிவித்தமையால் அவர் 2022, ஏப்ரல்,22,ல் கட்சியில் இருந்து நீக்கப்பட்டு பின்னர் அவருடைய பாராளுமன்ற பதவியும் பறிபோனது.

அதுபோல் 2022, மே,18இல் நிபந்தனையற்ற ஆதரவை வழங்கத் தயார் எனக்கூறி ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஹரின் பெர்னாண்டோ மற்றும் மனுஷ நாணயக்கார இருவரும் ஜனாதிபதி ரணிலுடன் இணைந்தனர்.

இவர்களுக்கு எதிராக அந்த கட்சிகள் மேற்கொண்ட தீர்மானம் சட்ட ரீதியானது என்று உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. இந்தத் தீர்ப்பு காரணமாக மூவரும் நாடாளுமன்ற உறுப்புரிமையை இழந்தனர்.

இந்த வெற்றிடங்களுக்கு அந்த கட்சியின் விருப்பு வாக்கு அடிப்படையில் அடுத்த நிலையில் உள்ளவர்களை தேர்தல் ஆணைக்குழு அறிவித்தது.

இந்த சட்டம் தற்போதய தமிழரசுக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு எக்காரணம் கொண்டும் ஏற்புடையது அல்ல பாராளுமன்ற உறுப்பினராக பதவியில் இருந்து ஒருவர் கட்சிக்கு எதிராக செயல்பட்டால் மட்டுமே இது சாத்தியம், வேட்பாளராக தேர்தலுக்கு முன்னம் கட்சி தீர்மானத்தை மீறிய ஒருவருக்கு கட்சி செயலாளர் வேட்பு மனுவில் போட்டியிட தேர்தல் நியமனக்குழு அனுமதி வழங்கியபின்னர் அவர் பாராளுமன்ற உறுப்பினராக தெரிவானால் பாராளுமன்ற உறுப்பினராவதற்கு முன்னம் கட்சி தீர்மானத்துக்கு எதிராக செயல்பட்டவர்களை வேட்பாளராக நியமித்திருக்க கூடாது.

வேட்பாளராக ஏற்று கட்சி செயலாளர் வேட்பு மனுவில் கையொப்பம் இட்ட பின்னர் அதே கட்சி செயலாளர் இவர்களை கட்சியில் இருந்து நீக்க அதிகாரம் இல்லை என்பதே சட்ட ரீதியான உண்மை.

இந்த உண்மைகள் தெரியாமல் சிலர் தமிழரசுக்கட்சியில் இப்போதுள்ள பாராளுமன்ற உறுப்பினர்கள் நீக்கப்படுவார்கள் என பகல் கனவு காண்பது தவறு.

• • •

## புது வருடத்தில் ... தொடர்ச்சி ...

அமெரிக்க இராணுவத்தில் பணியாற்றியதுடன், ஆப்கான் போரிலும் பங்குபற்றியிருந்தார்.

அதேசமயம், வாகனத் தாக்குதல் இடம் பெற்று சில மணி நேரத்தில் அமெரிக்காவின் லொஸ் வேகஸ் பகுதியில் அமைந்துள்ள ட்ரம்ப் ஆடம்பரவிடுதியில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த சைபர் றக் (Cybertruck) எனப்படும் மிகவும் பாதுகாப்பானது என வடிவமைக்கப்பட்ட வாகனம் திடீரெனெ வெடித்து சிதறியுள்ளது. எலோன் மஸ்க்கின் ரெஸ்லா நிறுவனத்தினால் வடிவமைக்கப்பட்ட இந்த வாகனம் திடீரெனெ வெடித்து சிதறியத்திற்கும் சென் ஒலியன்ஸ் பகுதியில் இடம்பெற்ற தாக்குதலுக்கும் தொடர்புகள் உள்ளது என அமெரிக்காவின் புலனாய்வு அமைப்புக்கள் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றன.

இந்த இரு தாக்குதல்களுக்கும் இடையில் தொடர்புகள் உண்டா என்பது குறித்து விசாரணைகளை நடத்துமாறு தான் உத்தரவிட்டுள்ளதாக அமெரிக்க அதிபர் ஜோ பைடன் புதன்கிழமை(1) இரவு பேசும் போது தெரிவித்துள்ளார்.

இதனிடையே இந்த தாக்குதல் ஒரு பயங்கரவாதத் தாக்குதல் எனவும், வாடகைக்கு அமர்த்தப்பட்ட காரில் வெடி குண்டுகளை ஏற்றி சென்ற சமயம் அது வெடித்துள்ளது எனவும் ரெஸ்லா நிறுவனத்தின் தலைவர் எலோன் மஸ்க் தெரிவித்துள்ளார். இந்த சம்பவத்தில் வாகனத்தின் சாரதி கொல்லப்பட்டதுடன், 7 பேர் காயமடைந்திருந்தனர்.

## தமிழக முன்னாள் ... தொடர்ச்சி ...

நினைவு நாட்களின் பொழுது சிறப்பு நிகழ்வுகளும் கொண்டாட்டப்பட்டு வருகின்றன.




வல்வெட்டித்துறை தொண்டைமானாறு சாலையில் ஆலடியில் அமைக்கப்பட்டிருந்த கம்பீரமான எம்ஜிஆரின் உருவச் சிலையை அவமதிக்கும் வகையில் அதனை உடைத்து இலங்கை இராணுவத்தினர் மேற்கொண்ட இந்தக் கொடூரமான சம்பவம் தொடர்பாக யாழ்ப் பாணத்தில் இயங்கும் இந்தியத் துணைத் தூதரகம் எந்த நடவடிக்கையும் எடுக்க வில்லை என்பதுடன் இந்த அராஜகம் தொடர்பாகக் கண்டனமும் தெரிவிக்கவில்லை.

இதேபோன்று இந்தியாவின் தந்தை என்று அழைக்கப்படும் மகாத்மா காந்தியின் உருவச் சிலையும் யாழ்ப்பாணத்தில் வைத்தியசாலை வீதியில் அமைக்கப்படடிருந்தது. இந்தச் சிலையும் *1974*ஆம் ஆண்டு பல்வேறு எதிர்ப்புக்களின் மத்தியில் 4ஆவது உலகத் தமிழராய்ச்சி மகா நாடு யாழ்ப்பாணத்தில் நடத்தப்பட்ட பொழுது ஸ்ரீலங்கா இராணுவத்தினராலும் பொலிசாரினா லும் உடைக்கப்பட்டன.இந்திய தேசத்தின் தந்தை யையும் சிங்களப் பேரினவாதம் அவமதித்த பொழுதும் கூட,இந்திய அரசாங்கமோ அல்லது கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகமோ எவ்வித கண்டனங்களும் தெரிவிக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

அதேவேளைவன்னிப்போருக்குப்பின்னர், *1987-1990* காலப் பகுதிகளில் ஈழத் தமிழர்களுக்கு எதிராக *165,000* வரையான தமிழ் பொதுமக்களைக் கொன்று, விரிவான போர்க்குற்றங்களைச் செய்த




இந்தியப் படைகளுக்கு ஒரு பிரமாண்டமான நினைவுச்சின்னத்தைக் கொழும்பில் கட்டுவதற்கு இலங்கை அரசாங்கம்,புது தில்லிக்கு அனுமதி அளித்தது. இந்தியாவில் இருந்து வருகை தரும் பிரமுகர்கள் கொழும்புக்கு வரும்போதெல்லாம் அந்த நினைவுச்சின்னத்திற்கு ‘மரியாதை’ செலுத்தி வருகின்றார்கள் என்பது ஈழத் தமிழர்களை அவமதிக்கும் செயலாகவே பார்க்கப்படுகின்றது.

வல்வெட்டித்துறை ஆலடியில் உள்ள வல்வெட்டித்துறை சிவன் கோயிலுக்குச் சுh-hந்தமா ஆதனம் ஆலய அறங்காவல் குழுவினால் ஆதிகோயிலடி பொதுப் பணி மன்றத்திற்கு வழங்கப்பட்ட ஆதனத்திலேயே எம்.ஜி.ஆர். அவர்களின் உருவச்சிலை அமைக்கப்பட்டது. இதனையே ஸ்ரீலங்கா இராணுவத்தினர் துப்பாக்கிப் பிடிமுயினால் சேதப்படுத்தியிருந்தனர். இந்த நிலையில் வல்வெட்டித்துறையில் அதுவும் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் அவர்களின் அன்புக்குப் பாத்திரமான பெருந்தலைவர் எம். ஜி.இராமச்சந்திரன் அவர்களின் உருவச்சிலை சேதமாக்கப்பட்டதால் யாழ்ப்பாண மக்களே கொதித்தெழுந்தனர் யாழ்ப்பாணத்தில் உள்ள எம்ஜிஆர் சங்கங்கள் சிலையை மீண்டும் அதேஇடத்தில் நிறுவ முயற்சிகள் எடுத்தபொழுது, ஸ்ரீலங்கா படைகள் கட்டுமானத் தொழிலாளர்கள் அந்த இடத்திற்கு வருவதைத் தடுத்தன. ஆனால் வல்வெடடித்துறை ஆதிகோயிலடி எம்ஜிஆர் பொதுப்பணி மன்றத்தினர் அதனைப் பொது மக்களின் உதவியுடன் அழகாகவும் கம்பீரமாகவும் கட்டி முடித்தனர்.

வல்வெட்டித்துறை ஆலடியில் *17.02.2017* இல்; புனரமைக்கப்பட்ட எம்.ஜி.ஆர் உருவச்சிலை அவரது *100*ஆவது அகவை நாளில் திறந்து; திறந்து பெருந்தொகையான பொதுமக்கள் கலந்து கொண்ட நிகழ்வில் வைக்கப்பட்டது.

அமரர் எம்.ஜி.இராமச்சந்திரன் அவர்கள் ஈழத்தமிழர்களுக்காகவும்,தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்காகவும் ஆற்றிய அளப்பரிய உதவிகளின் நன்றியின் நினைவுச் சின்னமாக எம்.ஜி.ஆரின் உருவச்சிலை இன்றும் வல்வெடடித்துறையின் எழுச்சியுடன் நிமிர்ந்து நிற்கின்றது.

• • •

## இன்றைய அமெரி ... தொடர்ச்சி ...

ஹரோல்ட் பிறவுன் வெளியிட்டிருந்தார்.

தற்போதுள்ள வான்பாதுகாப்பு பொறி முறைகள் அனைத்தும் செயலிழந்து போகும் தொழில்நுட்பத்தை நாம் கொண்டுள்ளோம். அதாவது இந்த புதிய விமானங்களை தற்போதுள்ள வான்எதிர்ப்பு ஏவுகணைகளால் சுட்டுவீழ்த்த முடியாது. இது படைவலுச் சமநிலையை மாற்றியமைக்கும் என இந்த விமானத்தின் அறிமுக கூட்டத்தில் பேசும்போது ஹரோல்ட் தெரிவித்திருந்தார்.

இந்த திட்டமே பின்னர் எப்-*117* மற்றும் பி-2 என்ற ஸ்ரெல்த் தாக்குதல் விமானங்களை உருவாக்க வழிகோலியது. சோவியத்து ஒன்றியம் அதற்கு எதிராக தனது வான் எதிர்ப்பு ஏவு கணைகள் மற்றும் கண்காணிப்பு ரடார்களின் தொழில்நுட்பத்தை மாற்றியமைக்க வேண்டிய நிலையும் ஏற்பட்டது.

அன்று ஆப்கானில் காட்டர் பயன்படுத்திய போரியல் அரசியல் மற்றும் இராஜதந்திர உதிகள் இன்றும் அமெரிக்காவினாலும், இஸ்ரேலி னாலும் மத்திய கிழக்கிலும், ஆசிய நாடுகளி லும், ஆபிரிக்காவிலும், ரஸ்யாவுக்கு எதிராகவும் பயன்படுத்தப்படுகின்றன. அதேபோல அன்று உருவாக்கப்பட்ட ஸ்ரெல்த் தொழில் நுட்பத்தை எட்டிவிட இன்று பல நாடுகள் போட்டி போடுகின்றன.

பனிப்போர் காலத்தில் சீனாவுடன் இரகசி யமாக பல சுற்றுப் பேச்சுக்களை மேற்கொண்டு, சீனாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையில் ஒரு உறவை ஏற்படுத்த மேற்கொண்ட முயற்சியில் காட்டரின் பங்களிப்பு முக்கியமானது. அன்றைய பனிப்போரில் சோவியத்தை முறியடிப்பதற்கு தாய்வானை அமெரிக்கா கைவிட்டிருந்தது.



அன்று அமெரிக்காவின் இந்த நடவடிக் கைக்கு எதிராக தாய்வானில் அமெரிக்க எதிர்ப்பு போராட்டமும் மேற்கொள்ளப்பட்டிருந்தது. சீன பொதுவுடமைக் கட்சியின் தலைவர் *1979* ஆம் ஆண்டு முதல் முதலில் அமெரிக்காவிற்கான பயணத்தையும் மேற்கொண்டிருந்தார். அதாவது ஒரு எதிரியை வீழ்த்துவதற்கு அவனின் நண் பனுடன் கூட்டுச் சேரவேண்டும் என்பதுடன் எதிரி வீழ்ந்த பின்னர் அவனின் நண்பனை வீழ்த்த வேண்டும் என்பதும் காட்டர் வகுத்த திட்டமாகும். அமெரிக்காதற்போதும் அதனைதான் பயன்படுத்தி வருகின்றது.

எனவே தான் அல்கைடா மற்றும் ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்புக்கள் கூட சில சமயங்களில் அமெரிக்காவின் நண்பனாகவும், சில சமயங்களில் எதிரியாகவும் இருக்கின்றன.

யூகோஸ்லாவாக்கியாவை உடைத்து பல நாடுகளை உருவாக்கிய அமெரிக்காவின் திட்டத்தை உலகின் அமைதிக்காக என காண்பிக்க காட்டர் பொஸ்னியா தொடர்பில் மேற்கொண்ட பேச்சுக்கள், வடகொரியாவின் அணுவாயுதத்தை தடுத்து கொரிய பிராந்தியத்தில் தனது ஆளுமையை த க்கவைப்பதற்கும், ரஸ்யாவின் பலத்தை சிதைப்பதற்கும் அமெரிக்கா வகுத்த திட்டத்தை நடைமுறைப்படுத்த அவர் மேற்கொண்ட பேச்சுக்களையும் உலகின் அமைதிக்கான முயற்சி என பாராட்டி நோபல் பரிசையும் மேற்குலகம் அவருக்கு *2002* ஆம் ஆண்டு வழங்கியிருந்தது.

அதாவது ஒரு அமெரிக்க அதிபரின் *5* வருட ஆட்சிக் காலம் என்பதும், அதன் பின்னர் அவரின் பணி என்பதும் தனது நாட்டின் நலன்களை மட்டும் முன்நிறுத்தி எவ்வாறு ஆற்றப்படுகின்றது என்பதற்கு காட்டர் ஒரு உதாரணம். அதிலும் குறிப்பாக படையில் இருந்து பதவிக்கு வரும் தலைவர்களின் பங்களிப்பு என்பது அரசியல் பின்புலங்கள் கொண்டவர்களை விட வேறுபட்டது. தனது மக்கள், தனது நாடு என்ற வேட்கை அவர்களிடம் எப்போதும் ஆளமான தாகவே இருப்பதுண்டு. பிடல் கஸ்ரோ, கேணல் கடாபி, சதாம் குசைன், விளமிடீர் பூட்டீன், காட்டர் என அந்த பட்டியல் மிகவும் நீளமானது.

• • •

## இலக்கு வைக்க ... தொடர்ச்சி ...

இருப்பு சிதைக்கப்பட்டதுடன் அரசியல் பிரதிநிதித்துவமும் கேள்விக்குறியானது. அத்தோடு காணிச் சுவீகரிப்பினால் ஏற்பட்ட வேலை நாள் குறைவின் காரணமாக பொருளாதார ரீதியாகவும் தொழிலாளர்கள் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியதாயிற்று. காணிச் சுவீகரிப்பினால் தொழிலாளர்கள் இடம்பெயர்ந்த நிலையில் அது கலாசாரம், பண்பாடு போன்றவற்றிலும் கணிசமான தாக்கத்தினை ஏற்படுத்தி இருந்தது.

1948ம் ஆண்டில் இலங்கையின் புவக் கொகுபிட்டிய என்னும் இன் என்தோட்டத்தில் வாழ்ந்த 400 குடும்பங்கள் தோட்டத்தில் இருந்து வெளியேற்றப்பட்ட நிலையில் இதற்கு டீ.எஸ்.சேனநாயக்கா காரண கர்த்தாவாக இருந்தார். இதற்கு எதிராக தொடரப்பட்ட வழக்கு தோல்வியிலேயே முடிவடைந்தது. பெருந்தோட்டக் காணிகளை சூட்சுமமாக சுவீகரித்து கிராமிய மக்களுக்கு வழங்கும் நடவடிக்கையை அரசாங்கங்கள் அவ்வப்போது முடுக்கி விட்டுள்ளன. இதன் ஒரு கட்டமாக 1980 இல் பயனற்ற தேயிலைக் காணிகள் என சுமார் 10,000 ஹெக்டேயர் காணிகள் கம்பளை, கண்டி, உலப்பனை, கடுகண்ணாவை பகுதிகளில் அடையாளப்படுத்தப்பட்டன. இந்நிலத்தை மாற்றுப்பயிர் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தவுள்ளதாக அரசு தரப்பு செய்திகள் வலியுறுத்திய நிலையில் உலக வங்கியும் இத்திட்டத்திற்கு அனுசரணையாக இருந்தது. எனினும் இக்காணி பின்னர் காணியற்ற கிராமிய மக்களுக்கே பகிர்ந்தளிக்கப்பட்டது. இக்காணிகளை இத்தோட்டங்களில் வேலைசெய்த இந்தியத் தமிழர்களுக்கும் பகிர்ந்தளிக்க வேண்டும் என்ற கோரிக்கை ‘செவிடன் காதில் ஊதிய சங்கானது’.

மாற்றுப்பயிர்ச்செய்கை ‘பன்முகப்படுத்தல்’ என்ற போர்வையில் திட்டமிடப்பட்ட குடியேற்றங்கள் ஆட்சியாளர்களால் மேற்கொள்ளப்பட்டன. இதனால் கண்டி , மாத்தளை, யட்டியாந்தோட்டை, அவிசாவளை போன்ற பகுதிகளில் தோட்டக்காணிகளில் இருந்தும், லயன் அறைகளில் இருந்தும் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் வெளியேற்றப்பட்டனர். இதே வேளை ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக் காலப்பகுதியில் நட்சா திட்டம், மகாவலிக் குடியேற்றம், தோட்டக் கொத்தணி முறை மற்றும் தோட்டப் பகுதிகளில் மலையக தமிழ் மக்களின் பலத்தைக் குறைக்கும் வகையில் திட்டமிடப்பட்ட குடியேற்றம் என்பன இடம்பெற்றன. இது 1972,1975 மற்றும் 1977 ம் ஆண்டுகளில் மிகத் தீவிரமாக இடம்பெற்றதையும் அறிந்து கொள்ள முடிகின்றது. திட்டமிடப்பட்ட குடியேற்றங்களுக்கு துணைபோகும் வகையில் நிலச்சீர் திருத்தங்கள், பன்முகப்படுத்தல், தோட்டப்புற கிராமப்புற ஒன்றிணைப்பு என்ற பெயரில் 1977,1981,1983 ஆண்டுகளில் பரவலாக முடுக்கி விடப்பட்டன. மலையக மக்களை சகல துறைகளிலும் நிர்வாணப்படுத்தும் முயற்சியின் ஒரு கட்டமே இதுவாகும் என்பதும் சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

### நிறைவேறாத வாக்குறுதிகள்

இந்திய வம்சாவளியினருக்கு தங்கியிருக்கும் வீடு மற்றும் காணி என்பவற்றுக்கு உரித்துரிமை உள்ளதாக திரும்பத் திரும்ப பரம்பரை பரம்பரையாக வாக்குறுதியளிக்கப்பட்டது. எனினும் இது இன்றும் நிறைவேறாத ஒரு விடயமாகவே இருந்து வருகின்றது. இச்சமூகம் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதுடன், பிற சமூகங்களினால் பாரபட்சத்துக்கு உள்ளாகியுமுள்ளது. இச்சூழ்நிலையும் இப்பாரபட்சத்தை நீக்குவதற்கு அரசாங்கம் முயலாமையும் தோட்டங்களுக்கு வெளியே இந்திய வம்சாவளியினர் சுதந்திரமாக தமது வதிவிடங்களை தேடிக் கொள்ள முடியாமல் செய்துள்ளன என்றும் அறிக்கைகள் வலியுறுத்துகின்றன.

பெருந்தோட்ட மக்களின் காணியுரிமை மற்றும் வீட்டுரிமை என்பன கனவாகி வருகின்ற நிலையில் ஆட்சியாளர்கள் பொய் வாக்குறுதிகளை வழங்கி அப்பாவி மக்களை ஏமாற்றுவதிலேயே குறியாக இருந்து வருகின்றனர். தேர்தல் விஞ்ஞாபனங்கள், வரவு செலவு திட்ட முன்மொழிவுகள்,மேடைப் பேச்சுகள் இவற்றில் காணி, வீட்டுரிமை குறித்து வழங்கப்படும் கவர்ச்சிகரமான வாக்குறுதிகள் ஏட்டுச் சுரைக்காயாகி’ விடுகின்றன. இதனிடையே பெருந்தோட்ட மக்களுக்கு காணியுரிமை மற்றும் வீட்டுரிமை என்பன கட்டாயமாக பெற்றுக் கொடுக்கப்படுமென்றும், இதற்கென வரவு செலவு திட்டத்தில் விசேட வேலைத்திட்டமொன்று செயற்படுத்தப்படுமென்றும் தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் கலைச்செல்வி நம்பிக்கை தெரிவித்துள்ளார். ’காணியுரிமை என்பது எமக்குரிய சொத்து. எமக்குரிய இவ்வுரிமையை சட்டரீதியாக தக்கவைத்துக்கொள்ள வேண்டியது எமது பொறுப்பாகும். ஆனால் துரதிஷ்டவசமாக மலையக மக்களுக்குரிய வீட்டுரிமை, காணியுரிமை என்பன 200 வருடங்களாக கனவாகவே இருந்து வருகின்றன’ என்றும் கலைச்செல்வி கவலை தெரிவித்துள்ளார்.

### ஹட்டன் பிரகடனம்

இதேவேளை தேசிய மக்கள் சக்தி கடந்த 2023 ம் ஆண்டு அக்டோபர் மாதம் ஹட்டன் பிரகடனத்தை வெளியிட்டிருந்தது. இதில் மலையக மக்களின் நலன் சார்ந்த பல்வேறு விடயங்கள் வலியுறுத்தப்பட்டிருந்தன. இவற்றை பெற்றுக் கொடுக்க தாம் உறுதி பூணுவதாகவும் தேசிய மக்கள் சக்தி தெரிவித்திருந்தது. இப்பிரகடனத்தில் மலையக மக்களின் காணியுரிமை, வீட்டுரிமை குறித்தும் வலியுறுத்தல்கள் இடம்பெற்றிருந்தன. இதற்கேற்ப மலையக தமிழ் மக்களின் காணி மற்றும் வீடுகளுக்கான உரிமையை துரிதமாக உறுதி செய்தல். தோட்டங்களை சார்ந்ததாக இனங்காணப்பட்டுள்ள 70,000 ஹெக்டேயருக்கு மேற்பட்ட காணிகளை மக்களின் விவசாய நடவடிக்கைகளுக்காக வழங்குதல் போன்ற விடயங்கள் பிரகடனத்தில் உள்ளடங்கியுள்ளன. இந்நிலையில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் கடந்தகால அரசாங்கங்களைப் போலல்லாது காத்திரமான முன்னெடுப்புக்களை மேற்கொண்டு மலையக மக்களின் காணியுரிமை மறறும் வீட்டுரிமையை நனவாக்கும் என்று மலையக மக்கள் நம்பிக்கை கொண்டுள்ளனர். இந்த நம்பிக்கை வீண்போகக்கூடாது. தேசிய மக்கள் சக்தியின் அமோக வெற்றியில் மலையக மக்களின் அளப்பரிய பங்களிப்பை நினைவிறுத்தி அம்மக்களின் தேவைகளை பூர்த்தி செய்ய தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் முன்வர வேண்டும். இதேவேளை மலையக மக்களுக்கான காணியுரிமையையும் வீட்டுரிமையையும் நிலைநாட்ட அவர்கள் தொடர்ந்து காணியில்லாத, வீடில்லாத சமூகமாக வாழாமலிருக்க, மலையக தமிழ் மக்களின் காணி, வீட்டுரிமை தொடர்பாக ஒரு தேசியக் கொள்கை வகுக்கப்பட வேண்டும் என்ற புத்திஜீவிகளின் கருத்தையும் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும்.

இந்நிலையில் எதிரணியில் இருந்து கொண்டு தற்போது கோஷமெழுப்பிக் கொண்டிருக்கும் மலையக அரசியல்வாதிகள் தமது கடந்தகால கசப்புணர்வுகளை மறந்து, காணி மற்றும் வீட்டுரிமையை சாதகமாக்கிக் கொள்ளும் நோக்கில் தேசிய மக்கள் சக்தியின் சிறந்த முன்னெடுப்புகளுக்கு தம்மாலான உச்சகட்ட பங்களிப்பினை வழங்க வேண்டும்.வாய்ச் சவடால்கள் இனியும் பயனளிக்காது என்பதனை இனியேனும் இவர்கள் புரிந்து நடந்து கொள்ள வேண்டியதும் அவசியமாகும்.

• • •

## காசா போரில்... தொடர்ச்சி ...

தில் இருந்து இதுவரையில் 28 இஸ்ரேலியப் படையினர் தற்கொலை செய்துள்ளதாக இஸ்ரேலிய வானொலி தெரிவித் துள்ளது.

கடந்த 15 மாதப் போரில் 14,000 இஸ்ரேலியர்கள் காயமடைந் துள்ளனர். அதாவது ஒவ்வொரு மாதமும் 1,000 பேர் காயமடைந்து மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டு வருவதாக இஸ்ரேலிய தகவல்கள் தெரிவித்துள்ளன.

இதனிடையே கடந்த 15 மாதங்களாக காசா பகுதி மீது இஸ்ரேல் மேற்கொண்டுவரும் தாக்குதல்களில் இதுவரையில் 45,400 பேர் கொல்லப்பட்டும், 108,000 பேர் காயமடைந்தும் உள்ளதாக காசா பகுதியின் சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது. இந்த காலப்பகுதியில் அங்கு இடம்பெற்ற தாக்குதல்களில் 217 ஊடகவியலாளர்களும் கொல்லப்பட்டுள்ளனர்.

## காரைநகர் படகுத் ... தொடர்ச்சி ...

நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக கொழும்பில் உள்ள இந்திய உயர்ஸ்தானிகரகம் அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது.

இந்தத் திட்டம், தொழிற்சாலை, இயந்திரங்கள், உபகரணங்கள், பொருட்கள், சேவைகள் போன்றவற்றை நிறுவுதல் உள்ளிட்ட குடிமைப் பணிகள் மற்றும் கொள்முதல் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது.

இத்திட்டம் முழுமையாக செயல்பாட்டுக்கு வந்ததும், புனரமைக்கப்பட்ட படகுத் தளம், உள்ளூர் கடற்றொழிலாளர்களின் வாழ்வாதார வாய்ப்புகளை அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும், படகுத் தளத்தைச் சுற்றியுள்ள சிறிய நிறுவனங்கள் உட்பட அந்தப்பகுதியில் அதிக வேலை வாய்ப்புகளை உருவாக்கும், அத்துடன் தரமான மீன்வளப் பொருட்களின் விநியோகத்தை மேம்படுத்த உதவும் என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## செயற்கை ... தொடர்ச்சி ...

முதலாவது அறிக்கை எதிர்வரும் ஏப்பிரல் மாதம் வெளியிடப்படும். செயற்கை நுண்ணறிவு தொழில் நுட்பத்தை ரஸ்யாவில் Sberbank வங்கியே முன்னெடுத்து வருகின் றது.

இந்த தொழில்நுட்பத்தில் சீனாவே உலகில் முன்னனியில் உள்ளது. அதனை விருத்தி செய்வதில் சீனா பெருமளவான முதலீடுகளைச் செய்துள்ளது. 2030 ஆம் ஆண்டு செயற்கை நுண்ணறிவில் சீனாவே உலகில் முன்னனியில் இருக்கும் என New Generation Artificial Intelligence Development Plan’ launched in 2017 என்ற திட்டம் தெரிவித்துள்ளது.

உற்பத்தித்துறை, சுகாதாரம், போக்குவரத்து என பல துறைகளில் அது செயற்கைத் தொழில்நுட்பத்தை பயன்படுத்த திட்டமிட்டுள்ளது. 2014 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரையில் 38,000 இற்கு மேற் பட்ட இந்த தொழில்நுட்டம் தொடர்பான காப்புரிமைகளை சீனா சமர்ப்பித்துள்ளது. அதாவது உலகில் உள்ள செயற்கை நுண்ணறிவு தொடர்பான காப்புரிமைகளில் இது 70 விகிதமாகும்.

இது தொடர்பான ஆய்வுக்கட்டுரைகளை வெளியிடுவதில் சீனா 2020 ஆம் ஆண்டு அமெரிக்காவை பின்தள்ளியுள்ளது. ரஸ்யாவில் செயற்கை நுண்ணறிவு தொடர்பான பாடங் கள் 5 முதல் 9 ஆம் வகுப்பு வரையுள்ள மாணவர்களின் கல்வித்திட்டத்தில் கடந்த மாதம் இணைக்கப்பட்டுள்ளது.

## மன்மோகன் சிங் ... தொடர்ச்சி ...

அவர் ஒரு கைபொம்மையாக இயங்கியதற்க்கான சாட்சியங்கள் நிறைய இருக்கின்றது. அதில் குறிப்பாக ஈழத்தமிழருடைய விடயத்தில் அவர் ஒரு கருவியாகத்தான் பயன்படுத்தப்பட்டார் என்பதில் எந்த வித சந்தேகங்களும் இல்லை. இது ஆச்சரியத்தக்க ஒரு பதில். ஏனெனில் பிரதமர் என்றாலோ ஒரு தலைமை அமைச்சர் என்றாலோ அவர்களுக்கு நிறைய பண்புகளும் பொறுப்புக்களும் உள்ளது.

ஆனால் அதையும் கடந்த ஒரு சக்தி அவரை ஆளுகையில் வைத்திருந்தது என்பது இந்திய அரசியல் வரலாற்றில் மறைக்க முடியாத ஒரு பகுதிகளாகும்.

**தற்போது இந்தியா சந்தித்துள்ள இராஜதந்திர தோல்விக்கு சிங்கின் அன்றைய முடிவு தான் காரணம் என்பதை இந்தியா உணர்ந்துள்ளதா?**

இது மன்மோகன் சிங்கின் முடிவுகள் என்பதைவிட அவருடைய அரசாங்கத்தின் முடிவுகள் என்பதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். இந்திய அரசாங்கத்திற்கு ஒரு பொறுப்பு இருக்கின்றது. அதே போல் இதனுடைய ஆரம்பம் மன்மோகன் சிங்கின் காலத்தில் மட்டுமே கிடையாது, இதனுடைய ஆரம்பம் என்பது வரலாற்று ரீதியாக 1985 -1986 காலப்பகுதியில் இருந்தே அதற்கான துவக்கங்களை நாம் பார்க்கின்றோம்.

இந்தியாவிற்கு அரசியல் ராஜதந்திர ரீதியான பின்னடைவு என்பது ராஜீவ் காந்தி கால கட்டத்தில் இருந்தே, இடைப்பட்ட சில வருடங்களைத் தவிர்த்து தொடர்ந்து இந்திய அரசாங்கத்திற்கும் புவிசார் அரசியல் ரீதியாக இலங்கையை கையாள்வதில் பெரு வட்டம் என்பதைக்கடந்து ஒரு குறுகிய வட்டத்திற்குள் இந்தியா சென்று விட்டது. இதை அரசியல் ரீதியாக தொடர் வடுக்கள், அதற்கான சரிவு நிலையில் தான் இந்தியா சென்றுகொண்டிருந்தது. ஈழத்தமிழர் பிரச்சினை, அதே போல் இலங்கையைக் கையாள்வதிலும் இந்தியா சுமார் 30 ஆண்டுகளுக்கு மேலாகவே தன்னுடைய சரிவை நோக்கித்தான் சென்றுகொண்டு இருக்கின்றது.

• • •

## அநுர அரசாங்க ... தொடர்ச்சி ...

செயற்பாட்டிற்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளுமாறு குச்சவெளி பிரதேச செயலாளரிடம் மகஜர் கையளிக்கப்பட்டதுடன் மாவட்ட செயலாளர், கிழக்கு மாகாண ஆளுநர் உள்ளிட்ட அரச திணைக்களங்கள் மற்றும் அரசியல் வாதிகளிடமும் இது தொடர்பான மகஜர்களை கையளிக்கவுள்ளதாகவும் ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

இதன்போது கருத்து தெரிவித்த பிரதேச செயலாளர் இது தொடர்பாக தொல்லியல் திணைக்கள் திருகோணமலை மாவட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடியதாகவும் இது தொல்லியல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினுடைய அதிகாரத்திற்கு உட்பட்டது எனவும் அவர்களுடன் கலந்தாலோசித்து தீர்வினை பெற்றுத்தர முயற்சிப்பதாகவும் தெரிவித்தார்.

பல முறை நில மீட்பு போராட்டங்களை நடாத்தி கலைத்து போயுள்ளனர். திரியாய் பகுதியிலும் விவசாய காணிகளை அப்பகுதி விகாராதிபதி ஒருவரான அரிசி மலை பௌத்த பிக்கு அடாவடியாக தனியார் காணிகளுக்குள் அத்து மீறி நிலத்தை உழுது நெற் செய்கைக்காக தயார் படுத்தியதனால் மக்கள் போராட்டம் நடத்தவேண்டியதாயிற்று. இது தொடர்பில் உரிய தரப்புக்களுக்கு அறிவித்த போதும் எது வித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை என அப்பகுதி விவசாயிகள் கவலை வெளியிடுகின்றனர்.

தொடர் நில அபகரிப்பால் தமிழ் முஸ்லீம் மக்களே பாதிக்கப்படுகின்றனர். நெற் செய்கையை வாழ்வாதாரமாக நம்பி வாழும் விவசாயிகள் இதனால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர் . எந்த அரசாங்கம் மாறி மாறி ஆட்சியை பொறுப்பேற்றாலும் நில அபகரிப்புக்கள் சொடர்ந்து கொண்டே உள்ளது .

எனவே நில ஆக்கிரமிப்பை தடுக்க புதிய அரசாங்கம் புதியதொரு பொறி முறைகளை உருவாக்க வேண்டும் என்பதே மக்களது எதிர்பார்ப்பாகும்.

• • •

## உலகின் சனத் ... தொடர்ச்சி ...

ஒவ்வொரு வினாடியும் உலகில் 4.2 பேர் பிறப்பதுடன், இருவர் மரணிக்கின்றனர். கடந்த வருடம் அமெரிக்காவின் மக்கள் தொகை 2.6 மில்லியனால் அதிகரித்துள்ளது. தற்போது அமெரிக்காவின் மக்கள் தொகை 341 மில்லியனாகும். அமெரிக்காவில் 9 வினாடிகளுக்கு ஒரு குழந்தை பிறக்கும் அதேசமயம், 9.4 வினாடிகளுக்கு ஒருவர் மரணிக்கின்றார். குடிவரவினால் 23.2 வினாடிகளுக்கு ஒருவர் அமெரிக்காவின் மக்கள் தொகையில் இணைந்து கொள்வதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## இந்தியா சோலார் ... தொடர்ச்சி ...

அம்மன் குளத்தின் திருத்தத்தையும் தடுத்து நிறுத்தியிருந்தனர்.

இதனால் குளத்தின் நீர் வீண்விரையமாகி வேளாண்மை அழிவுற்று வருகின்ற நிலையில், வயல் நிலங்களை சூரிய சக்தி மின்வலு திட்டத்திற்கு வழங்கியுள்ளதோடு இவ்வருட இறுதிக்குள் அத்திட்டத்தை ஆரம்பிக்க உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இந்த நிலையில், ஒவ்வொரு வருடமும் பெரும்போகத்தின் மூலம் அறுவடை செய்யப்படுகின்ற 112000 புசல் நெல் உற்பத்தி பாதிக்கப்படுவதோடு விவசாயிகளின் ஜீவனோபாயமும் பாதிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே இந்த வயற்காணி அபகரிப்பை தடுத்து நிறுத்தி வேளாண்மையை தொடர்ந்து செய்கை செய்ய நிலங்களை விடுவித்துத் தருமாறு கோரிக்கை விவசாயிகளால் விடுக்கப்பட்டுள்ளது.

## இனக் கொலைக் ... தொடர்ச்சி ...

உருவாக்க வேண்டும்.

நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் [TGTE] இந்த இனக் கொலைக் குற்றவாளிகளில் முதன்மையான பன்னிருவர் பட்டியல் ஒன்றை வெளியிட்டுள்ளது. பட்டியலில் ஆறாவது இடத்தில் சவேந்திர சில்வா இடம்பெறுகிறார். மகிந்த இராசபட்சே, சந்திரிகா, கோத்தபாயா, சரத் பொன்சேகா, ஜகத் டயஸ் ஆகியோருக்கு அடுத்த இடத்தில் இருப்பவர் சவேந்திர சில்வா! சவேந்திராவுக்கு அமெரிக்க அரசு தடை விதித்தது போல் இந்தியாவும் தடை விதிக்க வேண்டும்! உலக நாடுகள் ஒவ்வொன்றும் தடை விதிக்க வேண்டும்! இலங்கையும் தடை விதிக்குமளவுக்கு தமிழர்கள் கிளர்ந்தெழுந்து போராட வேண்டும்.

சவேந்திராவுக்கும் இனக் கொலைக் குற்றவாளிகள் ஒவ்வொருவருக்கும் ஐநாவும் உலக நாடுகளும் தடை விதிக்க வேண்டும் என்ற கோரிக்கைக்கான போராட்டம் இனவழிப்புக்கு ஈடுசெய் நீதி கோரும் போராட்டத்தின் முகன் மைக் கூறுகளில் ஒன்று. எந்த வல்லரசுக்கும் பாதந்தாங்கும் முயற்சி இந்தப் போராட்டத்துக்கு உதவாது.

தமிழீழ மக்களின் ஒன்றுபட்ட போராட்ட வலிமையையும், தமிழக மக்களின் உறுதியான தோழமையையும், உலகத் தமிழர்களின் ஆக்கத் துணையையும், முற்போக்கு வரலாற்று ஏரணத்தையும், இனவ்ழிப்புக்கு ஆளான இனத்திற்கே உரிய அற வலிமையையும் நம்பித் தொடர்ந்து சலியாது போராடுவோம்! வெல்வோம்!

• • •

## இலங்கைக்கு ... தொடர்ச்சி ...

யத்துக்குள் கொண்டுவருவது, பாரிய முதலீடுகள் மூலமாக இலங்கையில் தமது இருப்பைப் பேணிக் கொள்வது என்பனதான் சீனாவின் மூலோபாயத் திட்டங்கள்.

அசாங்கத்தின் பிரதான கட்சியான ஜே.வி.பி. சீனாவுடனான உறவுகளை நீண்டகாலமாகவே வைத்திருந்தது. மாவோவின் சிந்தனைகளுடன் ஜே.வி.பி.க்கு இருந்த பற்றுதல் அதற்குக் காரணம். இதனைப் பயன்படுத்தி இலங்கையில் தமது இருப்பைப் பலப்படுத்தும் சீனாவின் முயற்சிகளை இந்தியா ரசிக்கப்போவதில்லை. இதனை எவ்வாறு அநுர அரசு கையாளப்போகின்றது என்பதையும் பிறந்துள்ள புதிய ஆண்டில் காணக்கூடியதாக இருக்கும்.

தமிழ்த் தேசியக் கட்சிகளின் அரசியல் 2025 இல் எவ்வாறு இருக்கப்போகின்றது என்பதை அடுத்த வாரத்தில் பார்ப்போம்.




இலக்கில் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியவர்களே பொறுப்பு.
அவற்றில் உள்ள கருத்துக்கள் இலக்கின் கருத்துக்களாக பார்க்கப்பட வேண்டுமென்பதில்லை.

# தாயகமும் வாழ்வும்











